உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமுறைப்பெருமை.

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

## சுவாமிநாதபண்டிதரால்

இயற்றப்பட்டு,

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத் தாபகராகிய

இருக்கம்

## ஆதிமூலமுதலியாரால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண௵ பங்குனிமீ.

இதன்விலை அணா - உ.

(Copy-right Registered.)

1911.

MAHAMAHOPADHYAYA

யாழ்ப்பாணத்து வண்ணைநகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள் வெளியிட்ட அடங்கன்முறையின் முகவுரையோடு சேர்த்து அச்சிடப்பட்ட இத்திருமுறைப் பெருமையை அவர்களநுமதி பெற்று வேறாகப் பதிப்பித்தோம். இதனால்வரும் பொருள் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் பொருட்டு உபயோகப்படுத்தப் படும்.

இருக்கம் - ஆதிமூலமுதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமுறைப்பெருமை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

மதிமுடி வைத்துந் நதிபொறை யுயிர்கள்
சதிபெறு நடஞ்செய் தாண்டவ ராயன்
றேவர்க் கிரங்கிச் சிமையத் திறைஞ்சி
மேவங் குழலையிற் காவிற் றந்த
கற்பகக் களிற்றைச் சொற்பல பணிந்து
நற்கம லக்கழ லற்பி னிறைஞ்சுதுங்
கருமுறை கட்டழிக் கருடரு பன்னிரு
திருமுறைப் பெருமை செப்பலன் பெரிதே.

அந்த சாட்குண்ணிய பரிபூரண பதியாகிய சிவபிரானது திருவருளைப்பெற்ற திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய உண்மைநாயன்மாரால் திருவாய்மலர்ந்தருளப் பெற்றனவும், உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவரு மத்துவிதமாகுஞ் சிவபதினைத்தாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறத்திணைத் தெரிவிப்பனவுமாகிய தேவாரமுதற் றிருத்தொண்டர்புராணமிறுதியாயுள்ள திருப்பாக்களே திருமுறையெனப்படும்.

UPADHYAYI

அத்திருமுறை பன்னிரு பகுப்புடைத்து. அவை, திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய முதன்மூன்று திருமுறைகளும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய பின்மூன்று திருமுறைகளும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய ஏழாந்திருமுறையும், மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகந் திருக்கோவை என்னும் இரண்டுமாகிய எட்டாந்திருமுறையும், திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாவும் அவருட்சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுமாகிய ஒன்பதாந் திருமுறையும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரமாகிய பத்தாந்திருமுறையும், திருவாலவாயுடைய சிவபிரான் முதலாயினோர் அருளிச்செய்த திருமுகப்பாசுரமுதற் திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை யீறும் நாற்பான் பிரபந்தங்களுமாகிய பதினோராந் திருமுறையும், சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாந் திருமுறையுமாம்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரமுதல் நாற்பான் பிரபந்தமென்னு மிவற்றை அபயகுலசேகரசோழ வரசர்பெருமான் வேண்டப் பொல்லாப் பிள்ளையார் அநுக்கிரகம்பெற்ற நம்பியாண்டார்நம்பி மந்திரங்கள் பதினொன்றுதல்பற்றிப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினர். திருத்தொண்டர் புராணம் அநபாயசோழவரசர்பெருமான் காலத்திலே பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்தருளப்பட்டது. இவற்

றைத் திருமுறைகண்ட புராணத்தாலும், திருத்தொண்டர் புராண வரலாற்றாலும் உணர்க.

இத்திருமுறைகள் ஆளுடையபிள்ளையார் முதல் அருண்மொழித்தேவர் இறுதியாயுள்ள நாயன்மாரால் கூறியருளப்பட்டனவேனும், சதாசிவமூர்த்திபால்நின்று இருக்குமுதலிய வேதங்களனைத்தையுங் காமிகமுதலிய விருபத்தெட்டாகமங்களையும் தோற்றுவித்தாற்போல, சிவபிரானே அவ்வாளுடைய பிள்ளையார் முதலாயினோர்பால் அதிட்டித்துநின்று, அத்திருமுறைகளைத் தோற்றுவித்தலான், அவை, சிவபிரானால் இயற்றியருளப்பட்டனவேயாமென்க. அல்லதூஉம், பேயினாற் பிடிக்கப்பட்டான் வாய்ச்சொற்களெல்லாம் பேயின்சொற்களேயாமன்றி அவன்சொற்களாகாதவாறுபோலச் சிவபிரானால் அதிட்டிக்கப்பட்ட நாயன்மார் வாய்ச்சொற்களாகிய திருமுறைகளெல்லாம் அச்சிவபிரான் சொற்களேயாமன்றி அவர்சொற்களாகாமை தெற்றெனத் தெளியப்படும். இதனை "எனதுரை தனதுரை யாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்" என ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்தவாற்றானும் உணர்க.

திருச்சிற்றம்பலக்கோவையாருண்மையிலே, "அத்திருவாக்கைப் பதிவாக்கியமென்றே கொள்வதல்லது பசுவாக்கியமென்று நினைத்தாலுஞ் சனனமரணத்துக்கேதுவித்தாம். இவ்வுலகத்திலே பதிவாக்கியமேதென்னில், அநாதிமலமுத்தராயுள்ள சதாசிவமூர்த்தியுடைய திருவாக்காகிய ஆகம வேதங்களன்றி, முன் பரிபாக சின்னம் விளங்கும்படி போதிக்கின்ற ஞானகுருமூர்த்தங்க

வாயுள்ள சங்கராசாரியர் சமயாசாரியருடைய திருவாக்குகளுமாம்." எனக்கூறுமாற்றானும் அவர் வாக்குச் சிவவாக்கேயாமென்பது தெளியப்படும்.

திருமுறைகள், முதலினும் முடிவினும் ஓங்காரத்தையுடைய ஆரியவேதத்தைப்போல, ஓங்காரவாச்சியமாகிய சிவபிரானே பரம்பொருள் என்பதனையுணர்த்துமென்பது, அவை, ஓம் என்னும் பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓகாரத்தைக் காயத்திரிமந்திரங்களின் முதற்கணிற்குஞ் சிறப்புடைய தகரமெய்யோடு சேர்த்துத், "தோடுடைய செவியன்" என முதற்றிருமுறையின் முதலினும், ஈற்றெழுத்தாகிய மகரத்தை "நின்றதெங்கு நிலவி யுலகெலாம்" எனப் பன்னிரண்டாந் திருமுறையின் ஈற்றினும் புணர்ந்து நிலவுதலானும், அவற்றின் கண்ணவாகிய "தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழு மறை சேர் - நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காணீரு - மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னு - மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே." "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை - மூவர்கோ னாய் நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத் தெந்தை - யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்-மேவினோ மவனடியா ரடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே." என்பன முதலிய சுருதிகளானுந் துணியப்படும். மேலும், "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு - மூவர் தமிழுமுனிமொழியுங் - கோவை - திருவாசகமுந் திருமூலர் சொல்லு - மொருவாசகமென்

றுணர்." என்னும் ஔவையார் திருவாக்கானும், வேத முந் திருமுறைகளும் ஒருபொருளையே நுதலியனவெ ன்பது தெற்றெனவிளங்குமென்க.

ஆரியவேதத்திற் பதி பசு பாசங்களின் இலக்க ணங்கள் கூறப்பட்டிருத்தல்போலத் திருமுறைகளின் கண்ணும் பதி பசு பாசங்களின் இலக்கணங்கள் கூறப் பட்டிருத்தலான், அவையும் முப்பொருளையு முணர்தற் குக் கருவியாயுள்ளது என்னும் பொருளைத்தரும் வேத மென்னும்பதத்தானே விவகரிக்கப்படுமென்றற் கியா தோர் தடையுமின்மையுமறிக. இதனாலன்றே, "இருந் தோணி மிசைமேவி னார்கழங்க டிருமுன்பு தாழ்ந்தெ ழுந்து தமிழ்வேதம்பாடினார் தாளம் பெற்றார்." என வும், "மிக்கசொற் றமிழினால்வேதமும் பாடினார்." என வும், "விருப்புடன் பாட விசைத்தார் வேதந் தமிழால் விரித்தார்." எனவும், "மறைகளாய நான்குமென மலர் ந்த செஞ்சொற் றிருப்பதிகம்" எனவும், அருண்மொ ழித்தேவர் கூறியருளியதூஉமென்க. ஆளுடையபிள்ளை யார் திருப்பாசுரமுதலியவற்றின் வருத்தும் ஏனையவிட ங்களில் குறிப்பாற்றெருக்கும் முப்பொருளியல்பு செப் பியவாறுகாண்க.

சிவபிரானுக்கு மந்திரந் தூலசரீரமும், ஆன்மா சூக்குமசரீரமும், சத்தி அதிசூக்குமசரீரமுமாமெனச் சிவாகமங்கள் ஓதுதலான், அம்மந்திரசொரூபமாகிய வேதங்களின் கண்ணும், அவற்றின் வேறாகாத திருமு றைகளின் கண்ணும் சிவபிரான் விசேட சாந்நித்தியமு ற்றிருப்பரென்க.

பதியினது விளக்கம் அறிவொருசிறிதுமில்லாத கல் வெள்ளி செம்புகளில் அதிகமா? அப்பதியினது இலக்கணத்தையும் பிறவற்றையும் யதார்த்தமாகவே அறிவிக்கும் பேரறிவே வடிவாகிய தேவார திருவாசக முதலிய திருமுறைகளிலே அதிகமா? முன்னையவைகளினும் பார்க்கப் பின்னையவைகளில் அநந்தகோடிமடங்கதிகமன்றோ! கல் வெள்ளி செம்புகளிலே பதியினது விளக்கம் மந்திரநியாசத்திற்குப் பின்னன்றி முன்னில்லையே! தேவார திருவாசக முதலியவைகளோ பஞ்சாட்சரமந்திரத்தையும் அப்பஞ்சாட்சர முதலியசகல மந்திரப் பொருள்களையும் உள்ளடக்கிநின்று சித்தி முத்தி சித்திப்பிக்கும் மகாமந்திர வடிவமேயாதலால் அவைகளிலே பதியினது விளக்கம் நித்தியமென்பது சத்தியமாமே. "நாம் ஈண்டிலேம், உமாபதியின் பேடகத்துள்ளோம்" எனக் கோயிற்புராணத்தைக் குறித்துச் சிவபிரான் கூறியருளிய திருவாக்கானும் அது தெளிக. இக்கருத்துப்பற்றியன்றோ பட்டினத்தடிகளும், "சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியினு - மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்து விட்டோ - ரில்லினு மன்ப ரிடத்தினு மீசனிருப்ப தல்லாற் - கல்லினுஞ்செம்பினு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே."* என்று அருளிச்செய்தனர். "ஒருகணமிருப்பன் றெய்வ

---

* இதன்பொருளென்னையெனின், கண்ணுதல், சொல் முதலியவற்றிலே மந்திரநியாசமின்றி எந்நாளும் விளக்கமுற்றிருப்பான்; கல் முதலியவற்றிலே மந்திரநியாசத்துக்குப் பின்னன்றி முன் விளக்கமுற்றிருப்பானல்லன் என்க. எனவே, இறைவன் விளக்கமுறும் இடவிசேடம்தெரித்தவாறும். இஃதறியாது புற[illegible]யிகள் கல்லினுஞ்செம்பினும் இருப்பான் அல்லன் எனக்

கூறுதல் அறிவில்கூற்றுமெனவிடுக்க. என்னை! எங்கும் வியாபகமாய் இருக்கும் இறைவன் அவற்றில் இரானென்றல் சிறிதும்பொருந்தாமையானும், "கான்சாயும் வெள்ளி மலைக்கரசே" "செங்காட்டி லாத்தி நிழலருகே யிருப்பார்" "ஆளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே" என்றற் றொடக்கத்தனவாக அடிகளருளிச்செய்த திருவாக்குக்களுக்கும், "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா-வம்மலங் கழீஇயன்பரொடு மரீஇ-மாலற நேய மலிந்தவர் வேடமு-மாலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சீவன்முத்தர்க்கும் வாசனைமலந்தாக்காமைப்பொருட்டு விக்கிரகாராதனம் வேண்டப்படுதலை வற்புறுத்திக்கூறும் சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்திற்கும் முரணாகலானும், மகாஞானியாகியபட்டினத்தடிகட்கு அறியாமைக்குற்றம் பற்றுமாகலானும் என்க. அங்ஙனமாயின் "உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையும் மூத்தையறப்-புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்" என்றதன்கருத் தென்னையெனின், சரியை முதலியன "உறங்கினேன் கையில் வெறும் பாக்கெனத்-தா" மேதவிர்தல் குற்றமாகாதென்னும் ஆகமவசன முண்மையின், தமக்கு அந்நிலையுற்றபோது தாம் அவ்வழிபாட்டை யொழிந்தமை கூறினரேயன்றி அவ்விக்கிரகங்களில் சிவனதுவிளக்கமின்மையும் பிறர் அவ்வழிபாடு ஒழிதல்வேண்டுமென்பதும் கூறினரல்லர். அது போற்றுகிலேன் என்னும் சொற்கிடக்கையானு மெவர்க்கு மினிது விளங்கும். அற்றேல், "உறங்கினேன் கையில் வெறும்பாக் கெனச்" சரியைமுதலியன கழலுங்காலத்துச் சுட்டுணர்வின்றன்றே? அங்ஙனமாகவும், இவ்வடிகள் சுட்டிக் கூறிய தென்னையெனின், நன்று வினாயினாய்; அவ்வியல்பினையுடைய ஞானிகள் வழிபாடொழிந்திருக்கும் உண்மையறியாதவுலகினர் சிவாலயவழிபாடுசெய்யாதவர் சிவஞானியாவரோவென இழித்துக்கூறி நிரயத்தெய்தாமைப்பொருட்டு அவர்கண் மேல்வைத்த கருணைமேலீட்டால் தம்வாயிலாக அறிவுறுத்தமையின் அது குற்றமாகாமை தெற்றெனவுணர்க. தோத்திரரூபமாகிய செய்யுட்களில் சாத்திரக்கருத்துக் குறிப்பாக ஆங்காங்கு

ஆன்றோர் அமைத்துப்பாடியிருத்தலின் அத்தோத்திரத்தை அறிதன்மாத்திரையானே அவற்றின் உண்மைப்பொருண்முற்றும் உணரமுடியாது. சைவசாத்திரம்பற்றியே அஃதுணரப்படும். மற்றைய சைவநூல்களில் இதுபோல வருவனவற்றிற்கும் இவ்வாறுபொருள்கொண்டு சமாதானம்பெறுக.

---

வுருவினி லீசன்றன்மற் - றிருகணஞ் செங்கோ லோச்சு மிறையவர் பாலி ருப்ப - னருமறையவர்கு ழாத்து ளம்புவி மூளவி ருப்பன் - றூரிய யோகிக ளுளத் திற் றங்குவனிருந்தெப் போதும்." என்னும் பதிபசு பாச விளக்கச் செய்யுளும் இடவிசேடத்தாற் சிவபிரானது விளக்கம் ஆங்காங்குத் தாரதம்மியப்படுதலை வலியுறுத்துமாற்றால் இதற்கு உபகாரமாதலறிக.

இன்னும் நம்பியாண்டார்நம்பி தேவாரமுதலியவற்றை மந்திரங்கள் பதினொரு பகுதியனவாதல்பற்றிப் பதினொரு திருமுறைகளாகவும், அவற்றுள்ளே தேவாரங்களைச் சத்தகோடி மகாமந்திரப் பகுப்புப் பற்றி ஏழு திருமுறைகளாகவும், வகுத்ததூஉம் இத்திருமுறைகள் அச்சிவபிராற்குத் தூல சரீரமாகிய மந்திரமாதலொற்றுமை நோக்கியேயென்க. இவை அப்பெற்றியவாதல் "மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவ - ரிந்த வகை திருமுறைகளேழாக வெடுத்தமைத்துப் - பந்த முறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா - லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்" என்னுந் திருமுறைகண்ட புராணத்தானுந் தெளியப்படும்.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



மேலும், அத்திருமுறைக்கணுள்ள பாடல்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னு முத்தொழிலைச் செய்தமையும், தம்மை யோதினார்க்கு நோய் நீக்கம், செல்வப் பெருக்கம், ஞானப்பெருக்க முதலியவற்றை யளித்தலும் முத்தொழிலையு நடாத்துஞ் சிவபிரான் மந்திரமாகிய அச்சரீரங்களினின்றவற்றை இயக்கலானெனக் கடைப்பிடிக்க. சிவபிரான் மந்திர சரீரியாதலினாலன்றோ சிவாகமம், வேதாகமங்களை அருச்சிக்கவென விதித்ததூஉம், அவ்விதி யுணர்ந்து ஆன்றோரனைவரும் வேத சிவாகமங்களையும் தமிழ்வேதமாகிய தேவாரமுதலிய திருமுறைகளையும் பண்டுதொட் டின்றுவரையும் அருச்சித்து வருவதூஉமென்க.

இன்னும், இயல்பிலே திருவருள் விளக்கத்தையுடைய சிதம்பரமுதலாயதிவ்விய ஸ்தலங்களிலே திருவருள் விளக்கம் பெரிது மெய்துதற்பொருட்டு நித்திய நைமித்திகங்களிலே வேதபாராயணஞ் செய்வித்தன் மாத்திரையினமையாது சிவாகமத்திலே பூசாந்தத்தில் திராவிடஸ்தோத்திரஞ் செய்கவென விதித்தபடி திருமுறைகளையும் ஓதும்வண்ணம் ஆன்றோர் நியமித்ததூஉம், அதனான் அத்தலங்களிலே திருவருள் விளக்கம் பெரிதும் உறுவதூஉம், அவையோதப்பெறாத பொழுது வேதபாராயண முள்வழியுந் திருவருள் விளக்கம் அத்துணையில்லாததூஉம் அத்திருமுறைகள் வேதத்தினும் பார்க்கத் திருவருள் விளக்கத்தைப் பெரிது மெய்துவிக்குஞ் சிறப்புப்பற்றியே என்க.

இன்னும், தாந்தோன்றிய ஞான்றுதொட் டிஞ்ஞான்று வரையுஞ் சித்தாந்த சைவத்தின் உயர்வையும்,

ஏனைச் சமயங்களின் றாழ்வையும், விபூதி உருத்திராக்க பஞ்சாக்கரங்களின் மகிமைகளையுந் தெளிவுற விளக்கிச் சர்வலோகைக நாயகராகிய சிவபிரான் றிருவடியே நமக்குத் தாரகமாமெனப் பலரும் விசுவசித்து வழிபட்டு உய்யும்வண்ணஞ் செய்வனவும் அத்திருமுறைகளேயாமென அறிக.

இன்னும், எத்தனையோ அளவிறந்தகாலம் எத்தனையோ அளவிறந்த மகான்களாலே மந்திரநியாசஞ் செய்யப்பட்டு, அவ்வப்போழ்து அவ்வவருக்குப் பதிவிளக்கம் பெரிதுஞ் சித்திக்கப்பெற்ற சயம்புலிங்க காணலிங்க தைவிகலிங்க ஆரிடலிங்கங்களுள்ளும் எவை விசேடமுடையன? தேவார திருவாசகமுதலிய திருமுறைப் பாக்களைப்பெற்ற இலிங்கங்களன்றோ? இவ்வுண்மை சிவபுராணங்களானும் திருமுறைப்பாக்களைப்பெற்ற சிவஸ்தலங்களில் விசேடவழிபாடு காட்டும் பெரியோர்களுடைய அநுட்டானத்தினாலும் இனிதுவிளங்கும்.

இன்னும், மதுரைமுதலிய திருப்பதிகளிலே இலிங்கமுதலிய திருமேனிகளிருந்துமென்னை? ஆலயம் மண்டபங், கோபுரந் திருமதிலாதிகளிருந்துமென்னை? திருவாபரணாதிகளிருந்துமென்னை? பூசை திருவிழாக்களுக்குவிளைநிலந் தோட்டங்களிருந்துமென்னை? மடங்களும் ஆசாரியர்களுஞ் சந்நியாசிகளு மிருந்துமென்னை? எத்தனையோ இலட்சம் பிராமணர்கள் அன்னம்புசிக்குஞ் சத்திரங்களிருந்துமென்னை? அப்பிராமணர்களால் வேதபாராயணங்கள் நடந்துமென்னை? அருகசமயமும், புத்தசமயமும் எங்கெங்குந் தலைப்படத் தலைப்படச் சைவங்குன்றிய குன்றிய பொழுது இவைகளெல்லாங் கூடியும்

அப்புறச்சமயங்களை யோட்டிச் சைவசமயத்தை நாட்டினவா? இல்லையே. பின்பு அது செய்தவை யாவை? தேவாரமுதலிய திருமுறைப்பாக்களன்றோ? சைவாபிமானிகளாகிய அன்பர்களே! இவ்வுண்மையை நீங்களறியீர்களா? பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணங் கேட்டதில்லையா? இவை படிக்கப்பெறாத கோயில்களும், இவை படிக்கப்பெறாத மடங்களும், இவையறியாத கோயிலதிகாரிகளும், இவையறியாத பிராமணர்களும், இவையறியாத சைவாசாரியர்களும், இவையறியாத சைவர்களும் இருந்தும்பயனென்?

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல், நீறெங்கே? மாமறைநூ றென்ங்கே?
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே?"

மதுரைத் திருவிளையாடற்புராணத்திலே இடைக்காடனார் பிணக்குத் தீர்த்த படலம் நீங்கள் கேட்டதில்லையா? மதுரைச் சொக்கநாதசுவாமி, தமதடியாருள் ஒருவராகிய இடைக்காடனார் பாண்டியன்மீது பொருட்பேறு கருதிப் பாடியபாட்டினை அவன் சபையில் அரங்கேற்றியபொழுது, அதனையவன்புறக்கதே ஒருசிறிதவமதித்தமை பொறுக்கமாட்டாது, திருக்கோயிலைவிட்டகன்று உத்தரமதுரையிலே போய் எழுந்தருளியிருந்தாரென்னுந் திவ்வியசரித்திரத்தினாலே அவர், சிவானுபூதிச் செல்வர்களாகிய சமயகுரவர் முதலாயினோர் தம்மீதுபாடிய தேவாரமுதலிய திருமுறைகளை நாம் போற்றிப்புகழ்ந்து தமது திருக்கோயில் முதலியவற்றில் ஓதாமல் ஒழிவேமாயின் அதனைப் பொறுக்கமாட்டாரென்

பதும், அங்கங்கே விளங்கி நின்று நமக்கருள் செய்யாரென்பதும், சொக்கநாதசுவாமி, தமக்கு அதிவிசித்திரமாகிய ஆலயங்கள், மண்டபங்கள், கோபுரங்கள், திருமதில்கள், இரத்தினாபரணாதிகள், விளைநிலங்கள், தோட்டங்கள் எல்லாஞ் சமர்ப்பித்த மகாராஜாவாகிய பாண்டியனையுந், தமதடியவரொருவர்பொருட்டு வெறுத்தருளினமையால், அவர், தம்மால் மிக விரும்பியருளப்பட்ட சமயகுரவர் முதலாயினோர் பொருட்டும் பன்னிரு திருமுறைகளின் பொருட்டும், அத்திருமுறைகளைக்கேட்டுச் சிந்தித்துத் தம்மை வழிபடும் அடியார்கள் பொருட்டும் நம்மை வெறுப்பரென்பதும் தொனித்தல் காண்க.

அன்பர்களே, சிவலிங்கமென்பதற்குப் பொருள் என்னை? இலிங்கமென்னும் பெயர் சிலைமுதலியவற்றிற்கு நிருபசரிதவார்த்தையா? உபசரிதவார்த்தையா? சமயகுரவர்நால்வரும் சரியாவான்களா? கிரியாவான்களா? யோகிகளா? ஞானிகளா? தலந்தோறுஞ்சென்று சிவாலயதரிசனஞ்செய்தல் சரியையா? கிரியையா? யோகமா? ஞானமா? சிவபெருமானுக்கு வடிவம் எத்தனை வகைப்படும்? சரியையாளன் வழிபடும் வடிவம் எது? கிரியையாளன் வழிபடும் வடிவம் எது? யோகி வழிபடும் வடிவம் எது? ஞானி வழிபடும் வடிவம் எது? சிவனது சாந்நித்தியத்துவம் சிவலிங்கத்தில் நித்தியமா? அநித்தியமா? ஆவேசமா? அதிட்டானமா? அட்டபந்தன சலனாதி நிகழ்ந்தவழிப் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டபொழுது சிவலிங்கத்திலே சிவ சாந்நித்தியத்துவம் உண்டா? இல்லையா? அப்பொழுது, அது வழிபடற்பாலதா? ஒழிதற்பாலதா? சிவலிங்கத்திற்குப் பிரதிஷ்டை

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


உண்டா? இல்லையா? பிரதிஷ்டையாவது யாது? சிவலிங்கத்திற் சிவசாந்நித்தியத்திற்குக் காரணம் என்னை? அதனொழிவிற்குக் காரணமென்னை? தேவாரமுதலிய திருமுறைகளிற் சிவசாந்நித்தியத்திற்குக் காரணம் என்னை? அதற்கொழிவுண்டா? திருமுறைகளால் உணர்த்தப்படும் வடிவம் எது? சொரூபமா? தடத்தமா? சிவலிங்கத்திற்பாவிக்கப்படும் வடிவெது? சொரூபமா? தடத்தமா? இவற்றிற்குளிடையையும்,

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

என்னும் ஆன்றோர்வாக்கையும் நலமுறப் பலமுறை சிந்தித்து உண்மைகடைப்பிடித்துத் திருமுறைகளைப் பத்தியோடு ஓதி உய்யக்கருதுதலே உண்மை அறிவினலாய சிறந்தபயனென்றுணர்க.

திருமுறை பதினால் சித்தாந்தம் என்றும் பகரப்படுமெனல்.

இனி, திருமுறைகளை அருளிச்செய்தபெரியார் பதிகாணமுடையரென்பதும் இவர்கள் செயலெல்லாம் சிவச்செயல்களென்பதும், "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்—காலனையன் றேவிக் கராங் கொண்ட—பாலன்—மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்—கரணம்போ லல்லாமை காண்" என்னுந் திருக்களிற்றுப்படித் திருவெண்பாவானும், "என்னைப்பெண்ணாக்கியிரும்பாலை நெய்தலா—யும்பர் மகிழ்ந்திடவன்றே

தியதுந்—தம்பிரான்—கதவமடைக்கக் கழறியது மெல்லாம்—பதிகரண மென்றுணரப் பா." "அரவங் கடித்திறந்தா னுருயிரை மீட்டுந்—திருமறைக்காட் டிறப்பின் றிறந்துங்—காமலேயை—நீற்றறையை வேகமற நீராகப் பாடியதுங்—கூற்றுதைத்தான் போதமெனக்கொள்." "கல்லைப்பொன் னுக்கிக் கடுமுதலை வாய்ப்பிள்ளை—மெல்லவழைத்து வெறுக்கையினைச் — செல்லுகின்ற—வாற்றிலிட்டு மீட்டு மருங்குளத்திற் கண்டதுவுஞ்—சாற்றிற் சிவகரணந் தான்." "ஊமையினை மாற்றி யுணர்மொழியைச் செய்ததுவுங் — காமனைவென் றேனெழுதக் கற்றதுவு—மாமையைப்போ—லேந்தடக்கி யீசனருளிற் கலந்ததுவு—முந்தும் பசுகரண மோ." என்னும் சிவஞானப்பிரகாச வெண்பாக்களானும், "நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னுதன்—றன்செய றானேயென் றுந்தீபற—தன்னையே தந்தானென் றுந்தீபற." என்னுந்திருவுந்தியாரானுந், துணியப்படுதலால் இவர்களருளிச்செய்த அத்திருமுறைகள் "பதிநூல்" "சித்தாந்தம்" என்னுந் திருப்பேர்களால் வழங்குதற்கும் உரிமையுடையனவென்ப தொருதலை. இக்கருத்துப்பற்றியன்றே, "பதிநூல் பயிலாத பாசண்டர் மார்க்கங்—கதியல்ல வென்றுரைத்த கர்ணு—பதிநூலே—துள்ளபடி சொல்லா யுயர்ஞானக் கண்ணுடைய—வள்ளலே யெற்கருளை வைத்து" என்னும்வெண்பாவிற் போந்த வினுவிற்கு, "அம்மைதிரு வந்தாதி நக்கீரரந்தாதி — பொய்மையிலாப் பொன்வண்ணத் தந்தாதி—செம்மைத் — திருமூலர்மாலையிவை சித்தாந்த மாகும்—வருமூவர் வாக்கியமு மாம்" என்னும் விடையெழுந்ததூஉமென்க. "எனதுரை தனதுரையாக" என்பதுமுதலிய பிள்ளையார் திருவாக்குக்களானும் அது நன்கு

துணியப்படும். மற்றைத் திருநாமங்களைப் பெரியபுராணம் முதலிய திருமுறைகளுட் கண்டுதெளிக.

## திருமுறையிற் சிவபிரான் கழிபெருங்காதல் உடையரெனல்.

காமுகனாயினான் தன்வாய்ச் சொல்லினும் தன்னால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச்சொல்லிலே மிகவும் பற்றுடையனாய் மகிழ்ச்சியடைவன். அதுபோலச், சிவபிரானுந் தமது வாய்ச்சொல்லாகிய வேதாகமங்களினும் தம்மால் விரும்பப்பட்ட அடியவர் வாய்ச்சொல்*லாகிய தேவாரமுதலிய திருமுறைகளிலே மிகவும் பற்றுடையராய் மகிழ்ச்சியடைவர். அது, "ஒழித்திடும்பவப் பகைவிரைந் துள்ளமே யோதுமூ துணர்வோர்முற் - பழிச்சு பாடலை † யரற்கவை விடார்க்கிளம் பாவைய ருரைபோலுங் - கழித்தி டேனுபசாரமென் றிதனைநீ கட்டுரை யெனக்கொள்வாய் - விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே." என்னும் வைராக்கிய சதகச்செய்யுளாற் பெறப்படும்.

இன்னுமிதனை, "தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட் செங்கரும்பே மொழிக்குமொழி

* அடியவர்வாய்ச்சொல் என்பது முன்னும் பின்னும் பதிவாக்கியம் என்று கூறியிருத்தற்கு முரணாமை, சிவபிரான் அவர் வாக்கிற்கலந்திருத்தன் முதலிய ஏதுக்களானுணர்க † 'ஒழித்திடும் பவப்பகை விரைந்துள்ளமே யோது மூதுணர்வோர் முற்பழிச்சுபாடலை' எனவிசேடித்து வற்புறுத்திக்கூறினமையால் தேவாரமுதலியதிருப்பாட்டுக்கள் அவற்றையருளிச் செய்தவர்களுக்கும் பிறர்க்குந் தப்பாதுபெரும்பயன் றருவனவென்பது பெற்றாம்.

திந்திப்பாக - மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பியசொன் முற்றுமோதான்." என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும் வலியுறுத்துமென்க. அஃதன்றி, "பண்டையோர் நம்மைப் பாவு சொற்பாடல் கொண்டுநீ துதிகள் கூறெனவிளம்பி"* என்னுஞ் சுப்பிரமணியக் கடவுள் திருவுளக்கிடக்கையு மது வாமாறு கண்டுகொள்க.

திருமுறைகள் திருவருளைக் கொடுக்குமெனல்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அனுக்கிரகம்பெற்ற நம்பியாண்டார்நம்பி அன்பர்க்கள் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுதற்காகவே திருமுறைப் பெருமையை இராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜாவுக்குச்சொல்லி யருளினார். அதனை, "கொண்டு குல சேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்தோனருள்செய்த கொள்கையெல்லா - மண்டுபெருங் காதலுடன் சொல்லி யுந்த வண்டமிழின் பெருமைதனை வகுத்துச்சொல்வார்-கண்டபெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணு மந்திரங் கண்ணுதலோன் கூற - லெண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற்காக விம்மொழியின் பெருமையையா னியம்பக்கேணீ. சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமுந் தேவர் புகழ் திருத்தோணிச்சிவனார் பங்கிற் - பீடுடைய வுமை முலைப்பா லருளாலுண்டு பிஞ்ஞகனைச் சினவிடைமேற் பெருகக்கண்டு - தோடுடைய செவியன்முதற் கல்லூ ரென்னுந் தொடைமுடிவாப் பரசமயத் தொகைகண் மாளப் - பாடினார் பதிகங்கள் பாவிலொன்றும் பதினாறு

* 'பண்டையோர் நம்மைப பாவுசொற்பாடல் கொண்டு நீதுதிகள் கூறெனவிளம்பி என்றதனானும் 'ஒழித்திடும்பவப்பகை' என்னுங் குறிப்புக்கருத்து நன்கு விளக்கப்பட்டது.

யிரமுளதாய பகருமன்றே. திருநாவுக்கரையரெனுஞ் செம்மையாளர் தீயமணர் சிறைநீங்க வதிகைமேவுங் - குருநாமப் பாஞ்சடையைப் பரவிச்சூலை கொடுங்கூற்றா யினவென்ன வெடுத்துக் கோதி - லொருமாணைந் தரிக் குமொரு வரையுங்காறு மொருநாற்பத் தொன்பதினா யிரமதாகப் - பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறிப் பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்றுளாரே. பின்புசில நாளின்க ணருங்கமழ் பிறங்குதிரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தா வென்று - மின்பமுறத் திருப்பதிக முழிதோறு மீரு முப் பத்தெண்ணா யிரமதாக - முன்புபுகன் றவர்தொடு த்தான் மலையிற் சேர்ந்தார் முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர்தன்னி - லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார் மன்னவாராய்ந்து தருகவென வருளிச் செய்தார். அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு மதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப் - பருபதமுந் தற்பரமும் பரனையன்றிப் பலரில்லை யென்றெழுதும பனுவல்பாரி - னெரியினிடை வேவாதாற் றெதிரேயோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்றுங் - கரியையவளை விக்குங் கன் மிதக்கப்பண்ணுங் காமதலை கரையிலுறக் காற்றுங் காணே. என்றென்று நம்பிக்குப் பரிவானுண்மை யின்ற மிழின் பெருமைதனை யியம்பக்கேட்டுக் - குன்றொன்று பேருருவங் கொண்டாற்போலுங் குஞ்சரத்தோ னருளினையுட் கொண்டு மன்னன் - மன்றினிடஞ் சென்று மறையோர்க டொண்டர் வார்சடையோர் காவலுடை மரபோர்க் கெல்லா - நன்றெங்கள் கணபதிதன் சொல்லி தென்று நன்மையுடன் மன்னவனார் நவிலுங்காலை." என்னுந் திருமுறைகண்டபுராணத் திருவிருத்தங்களா னுணர்க.

### திருமுறை முத்திகொடுக்குமெனல்.

சிவகாரணமுடையோர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரமுதலிய திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணி தீர்த்து மோட்சத்தைக்கொடுக்க வல்லுன. அதனை, "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்—துறவியெனுந் தோணிகொணர்ந்தோன்—நிறையுலகிற்—பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்—றன்மாலை ஞானத் தமிழ்" என்னும் நம்பியாண்டார்நம்பி திருவாக்கானும், "காழிமாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை - யேழிசைத்தமிழ் ஞானசம் பந்தனெம் மடியான் - யாழநீபெற வெம்முரு விங்குவந் தளிப்பா - னூழி யோயநுகாறுமிவ் வரைப்பினி லமர்ந்து." "ஈட்ட ருந்தவ மியற்றுகென் றருளிநீங் குதலுங் - கோட்ட மின்றிமா லம்முறை வதிந்துபூங் கொன்றைத் - தோட்ட லங்கலாற் றொழப்புகு முத்தமிழ் விரகர் = பாட்ட லங்கலாற் பரஞ்சுடர்த் திருவுருப் பெற்றான்." என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுட்களானும், "கேவல ஞானக் கிழவ னொருடைப்-பிள்ளைநா வரசு பேரா ரூர - னாதன வாக்கிய னருந்தமிழ் மூலன் - சீவன் முத்தர் திருவாய் மலர்ந்த - நூல் பவநோய்க்கு நுண்ணிய மருந்தே." என்னுஞ் சத்தியஞானபோத ஆசிரியப்பாவானும், "வீட்டிற்கு வாயிலெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது - வாட்டிற்கு வல்ல வொருவற்கு ஞான வமுதுதவி - நாட்டிற்கிலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென் - பாட்டிற்குநீயு மவனுமொப் பீரெப் படியினுமே." என்னுஞ் சிவப்பிரகாச சுவாமிக டிருவாக்கானும், விரிவஞ்சிவிடுக்கப்பட்ட தேவாரத்திருக்கடைக்காப்புகள் பலவற்றானு முணர்க.

### திருமுறைகட்கு ஒப்புயர்வு கூறன்முதலியன உய்தியில்லதோர்குற்றமாமெனல்.

தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளுக்கும் ஒப்பாகவேனும் உயர்வாகவேனும் ஒருநூல் உண்டெனக் கூறிக் கொண்டாடுவோரும், அவற்றை நிந்திப்போரும், நிந்திக்க நினைப்போரும் எரிவாய் நிரயத்து வீழ்ந்து வருந்துவர். அதனை, "ஒப்பிலி யநாதி முத்த னோதிய வேத*மாதிக்—கொப்புயர் வுரைப்போர் நிந்தை யுரைப்பவ ருன்னு வாரும் — வெப்பெரி நிரயம் வீழ்ந்துவெந் துருகி வீயா — ரெப்பொழு தேனு மவரென் றிளைத்திளைத் தேங்கு வாரே." என்று சுப்பிரமணியப்பெருமான் அகத்தியமகாமுனிவருக்கு அறிவுறுத்திய பொருளையுடைய சிவதருமோத்தரச் செய்யுளா னுணர்க.

இக்கருத்துப்பற்றியே திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக மூர்த்திகளும் தாமருளிச்செய்த இலக்கணக்கொத்துப் பாயிரத்திலே வழாஅநூற்றிரையில், "திருவைக்கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம்: அன்றியும், அழகிய திருச்சிற்றம் பலமுடையார் அவர்வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கையாலெழுதினார். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பா

---

* வேதம் என்பது ஆரியவேதத்தையும் திராவிடவேதத்தையும் உணர்த்துமென்பது "திராவிடவேதம் பூர்வீகமே" எனப் பின்வரும் விஷயத்தால் நன்கு தெளிக. ஆதிசத்தத்தால் திருமுறைகளைத்தழுவுவாருமுளர்; அவர் தமிழ்வேதம் பூர்வீகமுள்ளதென்பதை உணராார்போலும்.

ட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர். அங்ஙனமும மையாது, இலக்கணமாவது தொல்காப்பியமொன்றுமே செய்யுளாவது திருவள்ளுவரொன்றுமே இவ்விரண்டு நீங்கலான இலக்கண விலக்கியமெல்லாம் ஒன்றற்கொன்று பெருமை சிறுமை இணையென்றுகொள்வாரென்பது தோன்ற இம்முறைவைத்து அடையைப் பொதுவாக்கினும். அவர் அநுபட்டோ இறையனாரகப்பொருண்முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம, சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப்பிள்ளையார்பாடல் முதலிய இலக்கியங்களையும், ஓர்பொருளாகவெண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரமுதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன்கதை முதலிய இலக்கியங்களையும் ஓர்பொருளாகவெண்ணி, வாளுைள் வீணுள் கழிப்பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், பாற்கடலுட்பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல்போல அவரதியற்கையென்க." என்று கூறியதூஉமென்க.

## தமிழ்வேதத்திருப்பதிகம்.

ஆரிய வேதங்களிலே சாகை என்னும் பிரிவுகள் அநேகம் உள. ஆரியவேதத்தின் பிரிவுகட்கு எங்ஙனஞ் சாகை என்னும்பெயர் வழங்கலாயிற்றோ அதுபோலத் தமிழ்வேதத்தின் பிரிவுகட்குந் திருப்பதிகம் என்னும்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-20.



இப்பெயர் வழங்கலாயிற்று. ஆரிய வேதங்களிலே வல்லி, பிராஹ்மணம், அநுவாகம், பஞ்சாதி என்றாங்குத் தமிழ் வேதத்திற்கும் பிரிவுப் பெயரொற்றுமை காட்டுதும். வேதத்திலே ஆனந்தவல்லி, பிருகுவல்லி, சீக்ஷாவல்லி, என மூன்று வல்லி இருத்தல் போலத் திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரங்கள் மும்முறையாகவும், திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரங்கள் மும்முறையாகவும் வகுக்கப்பட்டிருத்தல் காண்க.

பிராஹ்மணம் என்பது ஆதேசம் என்று சொல்லப்படும். அதாவது கட்டளையிடவேண்டிய காரியங்களை ஏவுகிற வேதத்தின்பாகமாம். அங்ஙனமே தமிழ்வேதத்தினும் "ஆளிலை யெம்பெரு மானவை யடித் தவப்பணியே" எனவும், "முதலை தரச்சொல்லு காலனையே" எனவும், "கூற்று யினவா றுவிலக் ககிலீர்" எனவும், "கண்ணி ஞுலுமைக் காணக் கதவினைத்—திண்ண மாகத் திறந்தருள் செய்மினே" எனவும் வருந் திருப்பதிகங்களும் இன்னோரன்ன பிற அற்புதத்திருப்பதிகங்களும் பிராஹ்மணம் போலுள்ளன வென்றறிக.

அநுவாகமென்பது ஒரு விடயத்தைப் பூரணமாகவுரைக்கும் வாக்கியசமுதாயமாம். சாகையின் பேதத்துள் இதுவுமொன்று. பஞ்சாதி என்பது பத்துவாக்கியங்கொண்டதாம். இவ்வாறாய பஞ்சாதிகள் ஓரநுவாகத்திற் பலவும் வரும்; ஒன்று இரண்டும் வரும். சில அநுவாகங்களில் பஞ்சாதிக்கணக்குக்குமேல் அதிகவாக்கியங்கள் இருப்பதுமுண்டு. தமிழ்வேதத்து ஒவ்வொரு திருப்பதிகங்களும் சாகைபோல விளங்கலின் அநுவாகத்தை ஒத்தனவாகும்.

அநுவாகங்களும் பத்துவாக்கிய சமுதாயமடங்கிய பஞ்சாதி தங்கட்பொருந்தநின்றாற்போல இத்திருப்பதிகங்களும் பத்துப்பாசுரங்கள் தங்கட்பொருந்த நிற்றலும், அநுவாகத்தின்கட் பஞ்சாதி ஒன்று இரண்டு மூன்றும் வருதல்போல இத்திருப்பதிகங்களுள்ளும், திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய "மெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி" எனவரூஉந் திருக்கழிப்பாலைத் திருப்பதிகத்தில் மூன்று திருப்பாசுரங்களும் "படையார் மழுவொன் றுபற்றி" எனவரூஉந் திருப்பிரமபுரத் திருப்பதிகத்தில் ஒரு திருப்பாசுரமும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த "நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங்கொள்ள" எனவரூஉந் திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகத்தில் இரண்டு திருப்பாசுரங்களும், "தம்மானங் காப்பதாகி" என்னுங் குறைந்த திருநேரிசை எனப் பெயரிய திருப்பதிகத்தில் ஆறு * திருப்பாசுரங்களும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த "திருவும் வண்மையுந் திண்டிறலரசும்" எனவரூஉந் திருநின்றியூர்த்திருப்பதிகத்தில் ஏழுதிருப்பாசுரங்களும் வருதலுங்காண்க. அநுவாகத்தின்கட் பஞ்சாதி அதிகமாய் வரன்மான இத்திராவிடமறைத் திருப்பதிகங்களுள்ளும், எரியார்மழு, அரனையுள்குவீர், காடதணிகலம், பிரமபுரத்துறை, பிரமனூர், விளங்கியசீர், பூமகனூர், சுரருலகு, வரமதேகொள, உற்றுமை, என்னும் முதற்குறிப்புக்களையுடைய திருப்பிரமபுரத் திருப்பதி

---

* சிவபிரான் தமிழ்வேதத்திலே சில திருப்பதிகங்களில் திருப்பாசுரங்கள் பத்துப் பதினொன்றாகிய நியதமழிய ஒன்று இரண்டு மூன்று ஆறு முதலியனவாகச்செய்தது இப்பெற்றி அறிவித்தற்குப்போலும்.

கங்களில் பன்னிருபாசுரங்கள் வருதலும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிய திருவையாற்றுத் திருவிருத்தத் திருப்பதிகத்தில் * இருபதுபாசுரங்கள் வருதலும், சித்தத்திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தில் † முப்பது திருப்பாசுரங்கள் வருதலும் கண்டுகொள்க.

இன்னன நியாயங்களானே பத்துத் திருப்பாசுரங்களையுடைய ஒவ்வொரு பிரிவுக்கும் திருப்பதிகம் என்று பெயராம். அதனை "ஞானசம் பந்தன் பாமரு பாடல் பத்தும் வல்லார் மேற்பழி போமே" எனவும், "பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாட வல்லார்" எனவும், "பண்மேனு டிசைபா டியபத்தும் வல்லார்" எனவும், "பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே" எனவும், வரூஉம் ஆளுடையபிள்ளையார் திருவாக்குக்களான் உணர்க.

முற்காலத்திலே பத்துப்பாக்களை ஒன்றாகத்தொகுத்து ஓர் நூலென்று வெளிப்படுத்துப. அங்ஙனமே முதலாம்பத்து, இரண்டாம்பத்து, மூன்றாம்பத்து முதலாகப் பப்பத்துத் தொகுக்கப்பட்டு, பதிற்றுப்பத்து என்றிருத்தலானும், திருமுருகாற்றுப்படை முதலாகப் பத்துப்பாட்டு (நூல்) தொகுக்கப்பட்டு பத்துப் பாட்டு என்றிருத்தலானும், திருக்குறள், நாலடியார், ஔவை குறள் முதலாயின ஒவ்வோரதிகாரங்கள் பப்பத்தாக வகுக்கப்பட்டிருத்தலானும் பதிகமென்பது பத்துப்பா

* இதனை இரண்டு திருப்பதிகங்களாகவும், † இதனை மூன்றுதிருப்பதிகங்களாகவுங் கொண்டு ஒரு அநுவாகத்தில் இரண்டு மூன்று பஞ்சாதிகள் வருதற்குச் சமமாகக் கொள்ளுதலுமொன்று.

டல்களையுடையதோர் பிரிவென்றே கொள்க. இலக்கண நூலார் பதிகமாவது ஐந்துபொதுவும் பதினொருசிறப்புமாகிய பலவகைப்பொருள்களையும் தொகுத்துச் சொல்வதென்பர்; அஃதிண்டைக்கேலாமை உணர்க.

இனிப் "பாயிர நாந்தி பதிக மென்ப" என்னும் விதிப்படி திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவலூர் நம்பியாரூரரும் இறுதியில் நாந்தி கூறலாகிய பாயிரமுரைத்தலாற் பதிகம் எனப் பெயர் பெற்றதென்பதூஉமாம். இங்ஙன மிவ்விருவர்களுடைய முதல் இறுதிக்கணின்ற திருமுறைகள் திருப்பதிகமெனப் பெயர் பெறவே, இடைக்கணின்ற அப்பாயிர முரைக்காத ஆளுடையவரசு திருமுறைச் செய்யுட்களும் இனம்பற்றி அப்பெயர்பெற்றனவெனக் கண்டு கொள்க.

இவ்வாறு பொருளுரைக்காது சமயாசாரியசுவாமிகள் நால்வருந் திருத்தலங்கடோறுஞ் சென்று தரிசித்துப்பாடியருளினரென்று நூல்களுரைத்தலான், அத்தலவெல்லை சமீபித்த இடத்தும், தலமடைந்துழியும், தூலலிங்கமாகிய கோபுரதரிசனமாயவிடத்தும், திருவீதிக்கணும் பரமனைநோக்கிப் பாடப்பெற்றனவாகலின் அவைவழிச்செல்வோர் பாசுரங்கள் என்னும் பொருட்டாகவும் முடிதல் காண்க வென்பாருமுளர். அங்ஙனம் வழிச்செல்வோர்க்குப் பதிகன் என்னும் பெயருண்மையும், ஆரியவேதத்தும் ஆரண்யகம் என்னும் பகுதிகள் ஆரண்யசம்பந்த முள்ளனவென்று காட்டப்பாட்டுக்களென அருத்தம்பண்ணலுண்மையும் கண்டுகொள்க.

1814



சிலர் பாசுரம் என்பது பதிகம் என்றே பொருளுரைத்து, பதிகம் பாசுரம் என்பனவொருபொருட் சொற்களாமென்று கொண்டிடர்ப்படுவர். பாசுரம் என்பது செய்யுட்கும், பதிகம் என்பது அச்செய்யுள் பத்துக் கொண்டவோர் தொகுதிக்கும் பெயராதல் பன்னிரண்டாந் திருமுறைத் திருவருட்பாட்டுரையாற் றெரிவதுமன்றி,

"நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும் பரவு மீசனை யேத்துபாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்"

என்றருளியதனானும் பிறவாற்றானும் பெறுதும். இக்காரணங்களானே திருவருட்பா, திருமுறை, திருப்பாசுரம் என்னும் பெயர்கள் போலத் திருப்பதிகம் என்றசொல்லுந் தமிழ்வேதத்தின் ஒவ்வோர் சாகைகட்கும் பெயராயமைந்ததென்பது.

### தமிழ்வேத சிக்ஷை.

ஆரிய வேதாங்கங்கள் ஆறு உள்ளன. அவற்றுள், நிருத்தம் யாஸ்கர் என்னும் இருடியாரானும், சந்தம் பிங்கள முனிவரானும், சிக்ஷை, வியாகரணம் என்னுமிரண்டும் சிவபெருமான் திருவருள் பெற்ற பாணினி முனிவரானுஞ் செய்யப்பட்டன. இவற்றுட் சிக்ஷை என்பது முக்கிய அங்கம். சிக்ஷா என்னும் பதம் சீக்ஷா என வேதங்களில் நீண்டு வரும். ஏனைய வழக்கிற்கங்ஙனம் வரல் கூடாதென்ப. சிக்ஷா என்னும் அங்கமுறைப்படியே வேதங்களை யோதுப. சிக்ஷை என்பது, ஶீக்ஷாம் வ்யாக்யாஸ்யாம꞉ | வர்ண꞉ ஸ்வர꞉ | மாத்ரா பலம் | ஸாம

ஸம்தாநஃ| ஊதாஹ்ருதஸ்ய க்ஷாயஸ்ராய| என்றவேதவாக்கியங்களின்படி இன்ன இடத்திலிருந்து இன்ன வெழுத்துப் பிறக்கும், இந்த யத்தனமுடையது என்னுமிவை முதலியவற்றைப்போதிக்கிற நூலானே சிக்ஷிக்கப்பட்ட எழுத்து, சுரம், மாத்திரை, பலம், சம உச்சாரணம், சங்கிதை என்னுந் தொடர்ச்சி முதலியவற்றை விளக்கும் நூலாம். இங்ஙனம் தமிழ்வேதத்திற்கும் சிக்ஷை அவசியமானதே. அத்தகைய சிக்ஷைகள் இயல் இசைநாடகம் என்னும் முத்தமிழ் நூல்களி னின்றுந்திரட்டப்படுதல் வேண்டும். அவற்றையெல்லா முரைக்கும் அகத்தியம், இசைநூல், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், என்னுமிவை இறந்துபட்டனவாகலான் திரட்டலரிதேயாம். ஆயினும் ஒருவாறு முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்தருளினவரும் சந்தானசாரியசுவாமிகளுள் ஒருவருமாகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் ஒன்றுதொகுத்துச்செய்துளார். அதனையே தமிழ்வேதச்சிக்ஷையென்ப. அதன்பெயர் திருமுறைகண்டபுராணம். அது தமிழ்வேதச்சந்தசுவெனப்படூஉம் பண்களின் கட்டளைகள் (வகைகள்) இவ்வளவின வென்பதை மாத்திரம் உணர்த்துகின்றது. ஆரிய சிக்ஷா நூலிற் சொல்லப்பட்ட எழுத்து, சுரம், சாமம் முதலியன கொண்டே தமிழ்வேதத் திருப்பதிகமுதலியன நடைபெற்றனவென்றுணர்க.

## இருவகை வேத வியல்கள்.

ஆரியவேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு. தமிழ்மறைகளும், திருஞானசம்பந்த சுவாமிகள் திருமறை, திருநாவுக்கரசுசுவாமிகள்

திருமறை, சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமறை, மாணிக்கவாசகசுவாமிகள் திருமறை என நான்கு. ஆரிய வேதங்கள் நான்கு எனக் குறிப்பிடப்படினும் "த்ரயீ" என்று அமரகோசம் முதலியன கூறுகின்றன. அங்ஙனமே தமிழ்மறைகள் நால்வர்தமிழ் எனப் பிரசித்தி பெற்றிருப்பினும், "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்—மூவர் தமிழும்" எனத் தெய்வப்புலமை ஔவைப்பிராட்டியாரும், "தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண்முக்கட் செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக—மூவர் சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பியசொல்" எனத் தாயுமானசுவாமிகளும் வைராக்கியசதகக்காரர், பிரபுலிங்கலீலைக்காரர் முதலிய பிறரும் இங்ஙனங் கூறுதல் காண்க. அதர்வ முனிவரானும் அங்கிராமுனிவரானுங் கண்டெடுக்கப்பட்ட மந்திரபாகங்கள் "அதர்வணவேதம்" என நான்காவதாகவைத் தெண்ணப்பட்டாற்போல, திருவாதவூர் முனிவரானியற்றப்பட்டுத் தில்லைவாழந்தண முனிவர்களாற் கண்டெடுக்கப்பட்ட திருவாசகம் திருக்கோவை என்பன நான்காம் வேதமாக வைத்தெண்ணப்படுமென்க.

ஆரியவேதங்கட்குப் பிருகதி, அநுட்டுப் முதலிய சந்தசுகள் இருத்தல்போலத் தமிழ்வேதங்கட்கும் நட்டபாடை தக்கராகம் முதலியபண்கள் இருத்தல் காண்க. உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம், பிரசயங்களாயசுரங்கள் போலத் தமிழ் மறைக்கும் எடுத்தல், படுத்தல், நலிதல், மெலிதலாய நான்கு முண்டென்க. ஆரியவேதசாகைகள்போலத் தமிழ்வேதத் திருப்பதிகங்கள் கொள்ளப்படும். அச்சாகைகளின் வரூஉம் பிரா

ஹ்மணம், கண்டம், அநுவாகம் போலத் தமிழ்மறைகளி லுந் திருப்பதிகங்கடோறுமுள்ள திருப்பாசுரங்களெ ண்ணப்படும். அநுவாகமாதியவற்றின்வரூஉம் பஞ்சாதி கள் போலத் திருப்பாசுர அடிகள் இருத்தல் காண்க. ஆரியவேதங்களில் "ஸமஸ்தவ்யஸ்தவா ஹி ஸமஸ்தவ்யஸ்த ஸாமோ ஸாஸீத்ஸப்தஸ்வரோ ஸாமாந்திதி" எனச் சாமவேதத்திற் கூறியாங்கு எழுவகைச் சாமபேத மிரு த்தல்போல எழுவகைத் திருமுறைகளிருத்தல் காண்க. இங்ஙன மேனையவற்றையு மொட்டி யுணர்ந்து கொள்க.

ஆரியவேத தமிழ்வேத ஒற்றுமை.

ஆரியவேதம் — முதலிற் சிவபெருமானால் அருளப்பட் டது.

தமிழ்வேதம் — அங்ஙனமே ஆதியிற் சிவபெருமானாற் செய்தருளப்பட்டதென்று சிவரகசியங் கூறுகி ன்றது.

ஆ — சிவபெருமான் நான்கு திருமுகங்களினின்று தோ ற்றுவிக்கப்பட்டது.

த — சிவபெருமான் ஆசாரியசுவாமிகள் நால்வர் திருமு கங்களினின்று தோற்றுவிக்கப்பட்டது.

ஆ — சாகைகளை யுடையது.

த — திருப்பதிகங்களை யுடையது.

ஆ — நான்கு.

த — நான்கு.

ஆ — கந்தசுவாமி, அதர்வமுனிவர், சுவேதாசுவதரமு னிவர், பிரமதேவர், சனற்குமாரர், யாஞ்ஞவற்

கியர், வியாசர், பிரசாபதி, வருணன், ஆசுவலாயனர், அநுமார், தத்தாத்திரேயர் முதலியபலரால் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

த — திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள், சேந்தனார், திருமாளிகைத்தேவர், புருடோத்தமநம்பி, கருவூர்த்தேவர் முதலாயினோராற் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

ஆ — பலபடக்கிடந்து வியாதமுனிவரால் வகுக்கப்பட்டது.

த — பலபடக்கிடந்து நம்பியாண்டார் நம்பி என்னுஞ் சைவமுனிவரால் திருமுறையாக வகுக்கப்பட்டது.

ஆ — பின்னர்ப் பிரமதேவராற் கூறப்பட்டது.

த — பின்னர்ப் பிள்ளையாராற் கூறப்பட்டது.

ஆ — அநேக சாகைகள் இலதாயிற்று.

த — அநேக திருப்பதிகங்கள் இலதாயிற்று.

ஆ — காயத்திரி, அநுட்டுப், பிருகதி, பங்தி முதலாய சந்தசுகளுடன் ஓதப்படும்.

த — நட்டபாடை, பழம்பஞ்சுரம், தக்கராகம், கொல்லி முதலாய பண்களுடன் ஓதப்படும்.

ஆ — கனம், சடை பொருந்த அத்தியயனம் பண்ணப்படும்.

த — சுத்தாங்கம், கீதாங்கம் இவை பொருந்தப் பாராயணஞ் செய்யப்படும்.

ஆ — சனகனர், அகத்தியர், சத்தியவசா என்பவர்புத்திரர் இராதிதராமுனிவர், பூருசிட்டமுனிகுமாரர் தபோநித்யர், மௌற்கல்யர் புத்திரர் நாகர் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.

த — அப்பூதியடிகளுயனூர், திருநீலநக்கநாயனூர், சிறுத்தொண்டநாயனூர், சண்டேசுரநாயனூர், மார்க்கண்டேயனூர், கோச்செங்கட்சோழநாயனூர் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.

ஆ — யாக்ஞவற்கியரது மனைவியாரான மைத்திரேயி, கார்க்கி, முதலிய நங்கையர் பேசப்பட்டார்கள்.

த — காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், முதலிய நங்கையர் வியக்கப்பெற்றனர்.

ஆ — [illegible] (மைத்ரேயீதிஹோவாச யாஜ்ஞவல்கிய உத்யாஸ்யந்வா அரேஹமஸ்மாத்ஸ்தாநா தஸ்மிகந்ததே)என மைத்திரேயிஎன்னும் மாதரசிக்கு உபதேசிக்கப்பட்டது.

த — "மானினேர்விழி மாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள்" என மங்கையர்க்கரசி யென்னு நங்கையர்திலகத்திற்கு உபதேசிக்கப்பட்டது.

ஆ — யமன்மனைவியாகிய ஜான்மலி என்பவளால் கடவல்லி என்னும் யசுர்வேதபாகம் உபதேசிக்கப்பட்டது.

த — பரமதத்தன் மனைவியாராய், சிவபெருமானல் அம்மையேயென்று அழைக்கப்பட்ட காரைக்காலம்

மையாரால் மூத்ததிருப்பதிகம் (தேவாரம்) பாடப்பட்டது.

ஆ — அவிமுக்தம், திருப்பருப்பதம், நொடித்தான்மலை (திருக்கயிலாயம்) திருக்கேதாரம், சிதம்பரம், திருவாரூர், பிரயாகை முதலிய தலங்களைப்புகழ்ந்து கூறுகின்றது.

த — அவையிற்றை புகழ்ந்து கூறுகின்றது.

ஆ — சனகாதி நால்வர்க்கும் கல்லால நீழற்கண் எழுந்தருளியிருந்து சிவதத்துவஞானம் உபதேசித்தருளியதை யசுர்வேதபாகமாகிய தக்ஷிணாமூர்த்தியுபநிடதம் வியக்கின்றது.

த — அதனை யாங்காங்கு வியந்து போற்றுகின்றது.

ஆ — திருநீற்றின் மகிமை கூறுவது பஸ்மசாபால உபநிடதம்.

த — திருநீற்றின் மகிமை கூறுவது திருநீற்றுப்பதிகம்.

ஆ — விநாயகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், தக்கயாகசங்காரம், சுப்பிரமணியக்கடவுள் என்னுமிவை வியந்து துதிக்கின்றது.

த — அவர்களை ஆங்காங்குப் போற்றுகின்றது.

ஆ — தேவியாகிய பரமேச்சுவரையைப் பல இடங்களிற் பேசும்.

த — அவ்வாறு கூறும்.

ஆ — கோயிலாகிய சிதம்பரத்தையே விசேடமாய் புகழ்வது.

த — அங்ஙனே புகழ்வது.

ஆ — ஆரிய முதனூல்.
த — தமிழ் முதனூல்.

ஆ — இறுதிக்கண் பாராயணப்பயன் கூறும்.
த — திருப்பதிக முடிவில் அப்பயன் கூறும்.

ஆ — சிவாலய நித்திய நைமித்திகங்கள், சிவபூசை முதலியவற்றி னேதைப்பெறும்.
த — அவற்றி னேதைபபெறும்.

ஆ — முத்திநிலை அமிர்தம் என்று கூறும்.
த — அங்ஙனம் கூறும்.

ஆ — முத்திப்பதத்தைச் சுவர்க்கம், நாகலோகம், சோமலோகம் என்றுரைக்கும்.
த — முத்திநிலை விண்ணுலகம், உம்பர்பதி, வீடு, வான், சிவலோகம் என்று கூறும்.

ஆ — தடத்தசொரூபலக்கணங்கள் கூறப்படும்.
த — இருவகை யிலக்கணமு மியம்பப்படும்.

ஆ — தாபத்திரயங்களை அடக்கும் பஞ்சசாந்தி கூறும்.
த — எவ்வகைத்துன்பங்களையும் போக்குங் கோளறுபதிகங் கூறும்.

ஆ — உபநிடதச் சாகைத் தொகை கூறும்.
த — திருப்பதிகத்தொகை யுரைக்கும்.

ஆ — ஓம் நமோ பகவதே ருத்ராய | ஓம் நமஸ்தே ருத்ரமந்யவ | எனவரூஉம் உருத்திரநமக முள்ளது.
த — வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி, மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி என இங்ஙனம் போற்றித் திருத்தாண்டகம், போற்றித் திருவிருத்தம், போற்றித்திருவகவல் உள்ளன.

ப. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-20.

ஆ — பஞ்சாக்ஷரம், உருத்திராக்கம், யோகம், பஞ்சப்பிரமம், ஷடங்கம் என்னுமிவை நரசிங்கதாபினி, உருத்திராக்கசாபாலம், தரிசனம், பஞ்சப்பிரமம், காலாக்கினிருத்திரம், பஸ்மசாபாலம் என்னுமிவை முதலிய உபநிடதங்களி னுணர்த்தப்படும்.

த — இவை பஞ்சாக்கரப்பதிகம், நமச்சிவாயப்பதிகம், திருநேரிசை, திருநீற்றுப்பதிகம் முதலியவற்றில் நன்கு உணர்த்தப்படும்.

இன்னன பல பொருள்களாற் றலானே இருவேதங்கட்கும் பேதங்காண்கிலேம். ஆரியவேதமே தமிழ்வேதம் தமிழ்வேதமே யாரியவேதம் என்க.

ஆரியவேத தமிழ்வேத சாரசம்மியம்.

ஆரியவேதம — பரப்பிரமமாகிய பரசிவனாலே அருளப்பட்டது.

தமிழ்வேதம் — அப் பரமசிவனைத் தம்முளடக்கிய பெரியோர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றது.

ஆ — பலபடக் கிடந்ததனை நான்காகவகுத்தவர் காசித் திருப்பதியின் மயக்கமுற்றவராகிய வியாதமுனிவர்.

த — பலபடக் கிடந்ததனைத் திருமுறையாக வகுத்தவர் திருநாரையூர்த்திருப்பதியில் ஞானவிளக்கமுற்ற ஆதிசைவமுனிகளாகிய நம்பியாண்டார் நம்பிகள்.

ஆ — சிவபிரானால் எழுதப் படாதது.

த — அவ்வாரியவேதம் அருளிய சிற்றம்பலம் உடையாராலே எழுதப்பட்டது.

ஆ — வேதாரணியத்திலே கதவை மூடிச்சிவலிங்கத்தை நேரே தரிசிக்கவொட்டாமற் செய்தது.
த — பூட்டிய கதவைத் திறந்து அதனைத் தரிசிக்கச்செய்தது.

ஆ — இந்திரன், சந்திரன், அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம், பிரமன், விட்டுணு முதலிய பெயர்களானும் பிரமத்தைப் போற்றுவது.
த — அங்ஙனமின்றிச் சிவபெருமானுக்கே சிறப்பாயுள்ள திருநாமங்களை எடுத்துப் போற்றுவது.

ஆ — யசுர்வேதத்துட் சுக்கில யசுர்வேதம் ஓதுவோரை மத்தியானத்திற் சண்டாளத்துவம் உடையாராகச்செய்வது.
த — எதை எப்பொழுது ஓதினும் சண்டாளத்துவம் நீங்கச்செய்வது.

ஆ — வாரணாசி, சிதம்பரம், பிரயாகை, திருவாரூர், சீர்காழி, முதலிய சில தலங்களைப் புகழ்வது.
த — அவைமுதலாகிய அநேகதலங்களைப் புகழ்வது.

ஆ — உபநயனச் சடங்கு செய்தபின் ஓதப்பெறுவது.
த — அச்சடங்கன்றிச் சமயதீக்கை விசேடதீக்கைமுதலியன பெற்றோர்களால் ஓதப்பெறுவது.

ஆ — பல தேவர்களைப் புகழ்வது.
த — அவர்களையெல்லாம் பசுக்களென்றொதுக்கி விட்டுச் சிவபெருமான் ஒருவரையே பதியென்று புகழ்வது.

ஆ — யசுர்வேத தைத்திரியமுதற்சாகை வருணன் தன் குமாரன் பிருகுவுக்கு உரைக்கப்பெற்றது.

த — "தோடுடைய" என்னும் முதற்குறிப்பையுடைய முதற்றிருச்சாகை பிள்ளையார் தம்பிதாவுக்கு உரைக்கப்பெற்றது.

ஆ — காயத்திரி, அநுட்டுப், திருட்டுப், பங்தி, உட்டுணிக் முதலாய எழு சந்தசுகளை யுடையது.

த — நட்டபாடை, தக்கராகம், கொல்லி, தக்கேசி, குறிஞ்சி, பழந்தக்கராகம், மேகராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, இந்தளம், சீகாமரம், நட்டராகம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி முதலிய முக்கிய இருபத்தொருசந்தசுகளை யுடையது.

ஆ — அத்தியயன மாத்திர முடையது.

த — அதனுடனே நித்திய பூசை, நைமித்திகமாகிய மகோற்சவம் என்னு மிவற்றையு முடையது.

ஆ — பலசமயிகளுக்கும் பதிப்பொருளை நிச்சயிக்கவொட்டாது மயக்கஞ் செய்வது.

த — பதிப்பொருள் சிவபெருமானேயென்று நன்கு விளக்குவது.

ஆ — ஓதுவார் "விழிநீர் பெருக்கி—நெஞ்ச நெக்குருகி நிற்"கச்செய்யாதது.

த — ஓதுவார் "கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க—டொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய—மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி—யன்பரா"கச்செய்வது.

ஆ — விட்டுணு, பிரமன், சூரியன், அக்கினி என்னு மிவர்கட்கும் ஆதிக்கம் கூறும் உபப்பிருங் கணங்களை யுடையது.

த — பரம்பொருளாகிய சிவபெருமானைத் தம்முளடக்கிய சிவனடியார்களுக்கே ஆதிக்க முறைக்குறுடப்பிருங்கணத்தை யுடையது.

ஆ — பதினெட்டுப் புராணங்களாகிய உபப்பிருங்கணங்களை யுடையது.

த — அறுபத்து மூவராந் தனியடியார் புராணங்கள் அறுபத்து மூன்றும், தொகை யடியார் புராணங்கள் ஒன்பதுமாகிய எழுபானிரண்டு புராணங்களாகிய உபப்பிருங் கணங்களை உடையது.

ஆ — உலகியல் வழக்கங்கூறும் தனுர்வேதம், கந்தருவவேதம், அர்த்தவேதம், ஆயுர்வேதம் என்னும் உபவேதங்களை யுடையது.

த — உலகியல் வழக்குடன் சரியை, கிரியை, யோக, ஞானபத லக்கணங்களையும் முத்திநெறியையும் மூன்னுறத் தெரிக்கும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந்திருமுறை என்னும் உபவேதங்களை உடையது.

ஆ — கேட்டோர் ஆசுவலாயனர், சனற்குமாரர், புசுண்டர், பைப்பலாதர், பிப்பிலாதர், மைத்திரேயி, சுவேதகேது, அங்கீரசு, அசுவினிதேவதைகள், தத்தியங்முனி, பிருகு, யமன் முதலிய பசுக்கள்.

த — இதனைக் கேட்டவர் பதிப்பொருளாகிய பரமசிவன் ஒருவரே.

ஆ — தன்கணுள்ள மந்திரங்களைத் தேவர்கள் போர்முகத்தில் அத்திரங்களாகப் பிரயோகித்த போது அசுரர்களாற் கவரப்பட்டது.

த — தன்கணுள்ள திருப்பாசுர மந்திரத்தை முனைமுகத்தில் அத்தியமாகப்பிரயோகித்த காலைப் புத்தநந்திதலையுருளவும், புத்தர்கள் சுவாமுடியாது வெருவியோடவும் செய்தது.

ஆ — அசுரர் கடனீருக்குட் கொண்டு செல்லவும் அதற்குள் அமைந்து இருந்தது.

த — பிள்ளையார் வைகையாற்றில் விட எதிரேறி நீரைக் கிழித்துச் சென்றது.

ஆ — கடற்குள் தான்தங்கிய இடத்திற்கு யாதோர் மகிமையும் உண்டாகப்பெற்றிலது.

த — தான் யாண்டுச் சென்று தங்கிற்றோ ஆண்டுத் திருவேடகம் என்னுந் திருத்தலமுண்டாகிச் சிவபெருமான் சாந்நித்தியாராயமர்ந்து இன்றும் அருள்புரியப்பெற்றது.

ஆ — இசைக்குள் அடங்கியது.

த — இசைக்குள் அடங்காதது. (அது யாழ்மூரித்திருப்பதிகம் பாடியருளிய காலத்துத் திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் தம் யாழை முரிக்கப்போய உண்மையாற் றெரிந்தாம்.)

ஆ — அழிதன் மாலையவாய சுவர்க்காதிபதவிகளை யடைவிக்கும் வேள்விகளைப் போதிப்பது.

த — அப்பதவிகளழிந்து, அவையிற்றின் றலைவர்களும் நொந்தினர்கள், அவர்தொகை கங்கைக்கரைக்கண் உள்ள மணலை நிகர்க்குமாகலின் அவையிற்றை நச்சாது சிவபுண்ணியங்களைச் செய்க என்றுரைப்பது.

ஆ - வெளிப்படையிற் கன்மயாகமுங் குறிப்பின் ஞான யாகமும் விதிப்பது.
த - வெளிப்படையில் ஞானயாகமும் குறிப்பிற் கன்ம யாகமுங் கூறுவது.

ஆ - இசைக்கருவிகளின்றிப் பாராயணம்பண்ணப்படு வது.
த - தாளம் வீணையென்னும் இசைக் கருவிகளுடன் பாராயணம் பண்ணப்படுவது.

ஆ - எந்த மந்திரங்களும் பிரணவமின்றி யியங்கப்பெ றாதது.
த - எத்திருப்பதிகமந்திரங்களும் பிரணவம் வேண்டாதே யியங்கப்பெறுவது.

ஆ - [illegible] (ப்ராஹ்மசர்யேணத பச்சைவ தேவாஸ் சுவர்க்கம் லோகமாயந்) என்று அதர் வண வேதங் கூறுமாறு பிரமசரியத்தாலுந் தவ த்தாலுமே சுவர்க்கத்தைத் தேவர்கள் பெற்றார் களென்பது. சாமவேதமும் இங்ஙனே கூறும்.
த - எந்நிலை யுடையாராயினும் சிவபெருமானுக் கன்பாரா யினவர் அழியாதபேரின்பத்தையு மடைவார் என்பது.

ஆ - [illegible] ஜயதி (புத்ரேணலோகாஞ் ஜயதி) [illegible] (புத்ரேணாநந்த்யமச்நுதே) [illegible] (நாபுத்ரஸ்யலோகோஸ்தி) என்னு மிவை

போன்ற பலவசனங்களானே புத்திரனால் உத்தமலோகத்தை யடையலாம். ஆகலாற் புத்திரப்பேறு உத்தமலோகசாதகம் என்கின்றது.

த — "தந்தையார் தாயா ருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமரே—வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமா மிதற்கேது மகிழவேண் டாம்"எந்தையாரது திருநாமமாகிய நமச்சிவாயவென்று உரைமின். உடனே எழுவிசும்பின்மேலிருக்கலா மென்றுரைப்பது.

ஆ — "அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு" என்பது.

த — "அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு—தருவமென் றனவில்லேவதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்—பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும்பானு ளியவினிற் றூது" போக்கியது.

ஆ — திரிபுரதகன ரதத்திற்குக் குதிரைகளாகும்.

த — தெய்வத்தன்மை பொருந்திய (ஆரம்) மாலையாக விளங்கும்.

ஆ — வருந்தித்தவஞ்செய்து தன்னை இறைவன் திருவடிப்பாதுகையாக அணியப்பெற்றது.

த — இறைவனே திருவடிநோவ வெழுந்தருளிவந்து எழுதித் திருக்காதிற்றூங்கப்பெற்றது.

ஆ — தன்னைக்கேட்ட சனகாதி நால்வர்க்கும் ஞானம் உதியாவண்ணம் கலக்கமுண்டாக்கியது.

த — தன்னைக் கேட்ட பாண்டியனுருக்கும், யானைமுதலியவற்றிற்கும் அறிவுவிளங்கச்செய்தது. அஃ

தன்றி அநேக சமணர் புத்தர்களுக்கும் சிவஞா னத்தை உதிப்பித்தது.

ஆ — நாராயணம், தைத்திரீயம், சாந்தோக்கியம், பிருக தாரணியம், கைவல்லியம் என்னும் உபநிடதங் களாகிய ஐந்துதிருப்பதிகங்களாலும் தகரவித் தையாம் சிதம்பர வழிபாட்டை விளம்புவது.

த — கற்றாங்கு, ஆடினாய், அன்னம், பனைக்கை, செஞ் சடை, பத்தனாய், அரியானை, பாலையுடை, கரு நட்ட, மங்குல், மடித்தாடு என்றற் றொடக்க த்த பதினொரு திருப்பதிகங்களானும் தகரவித் தையாஞ் சிதம்பரவழிபாட்டை யுரைப்பது.

ஆ — சிதம்பர க்ஷேத்திரமுதலியவற்றிலுள்ள சிவசந்நி தானங்களில் 'அவதாராயாத்' என்று கட்டிய முறைக்கப்பெறுவது.

த — சிதம்பர மகாதலமுதலிய திவ்விய திருப்பதிகடோ றுமுள்ள சிவசந்நிதானங்களிலே பூசாகாலங்க ளில் "தேவாரம் அருளிப்பாடுக" "திருவா சகம் அருளிப்பாடுக" என்று கட்டியமு றைக்கப்பெறுவது.

ஆ — ஆயிரத்து நூற்று முப்பத்தொரு சாகைகளைக் கொண்டது.

த — ஓரிலக்கத்து மூவாயிரஞ் சாகைகளாந்திருப்பதிகங் களை யுடையது.

ஆ — சாமவேத கானஞ் செய்த இராவணற்குச் சிவ பெருமான் முக்கோடிநாளும் ஒரு வாளுந் தே ரும் அருளினர்.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-20.


த — இவ்வேதம் பாடினவர்களின் பொருட்டுச் சிவபெருமான் பல உயிரையெழுப்பியும், நோய்களை நீக்கியும், பொன்னீந்தும், திருமணத்தில் அநேகருக்குமுத்திகொடுத்தருளியும், வேண்டியவேண்டியாங்கருளினர்.

ஆ — இதனைக் கேட்டுக் களிப்ப இது பெரும்பாலும் வழங்கப் பெறாஉம் உத்தர திசைக்க ணோர்சபையும் வகுத்தாடியருளினனல்லனிறைவன்.

த — இதனைக் கேட்டுக் களிப்பான் இதுவழங்கப் பெறாஉம் திருவாலங்காடுமுதற் கன்னியா குமரிகாறுமைந்து சபை வகுத்து ஆடியருளிநிற்குமவ்விறைவன்.

ஆ — அசுரபரிசம் பட்டுக் குற்ற மடைந்து காஞ்சியில் வந்து பூசித்து மாற்றிக்கொண்டது.

த — அக்கினி எங்ஙன மழுக்கின்றித் தன்னைச்சேர்ந்த வத்துக்களையுந் தன்போலாக்குகிறதோ, அங்ஙனந் தானோர் குற்றமு மடையாது தன்னைத் தொட்டவர்களையும் பரிசுத்தப்படுத்துகின்றது.

ஆ — அற்புத வாயிலாகச் சிவபரத்துவஞ் செய்தது காணோம்.

த — அநேக திவ்வியாற்புதங்களைக்காட்டி அவைவாயிலாகப் பரசிவனே முழுமுதற் கடவுளென்றுஞ் சைவசித்தாந்தமே மெய்ச்சமயமென்றும் விளக்கிற்று.

ஆ — அபசுரத்துடன் ஓதினல், துவட்டாவுக்கும் இந்திராதிதேவர்கட்கும் பெருந்துன்பு விளைந்தது போலச் சங்கடங்களை விளைப்பது.

த — "இசைகூர வந்தவண மேத்துமவர்" எனவும், 'சம்பந்தன் கருதுபாடல் கோழையா வழைப்பி னுங் கூடுவார் நீடுவானுலகி னூடே" எனவும் ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளி யாங்கு எவ்வண மேத்தினும் எல்லாப் பொரு ளையும் பயப்பது.

ஆ — ஒருவர்க்கெங்ஙனந் தம் வாக்கு அத்துணை யின் பமாத் தோன்றுமோ அன்னதே போலப் பரப் பிரமமாகியபரசிவத்திற்கு அத்துணையின்பமாத் தோன்றாதது.

த — ஒருவர்க்கெங்ஙனந் தம்வாக்கினும் தம் மதலையர் குதலைகள் இன்பம்பயக்குமோ, அதினும் விடர் களுக்குத் தங்காதலிளம்பாவையர் உரைகள் எத்துணை மகிழ்வை விளைக்குமோ, அவையே மானப் பரப்பிரமமாகிய பரசிவனார்க்கத்துணை மகிழ்வை விளைப்பது.

ஆ — பிரம காயத்திரி கூறி மூன்று சந்தி செய்வார் அலை தோதுவார்.

த — பிரம காயத்திரி யுடன் சிவகாயத்திரி, பஞ்சப்பிர மம், சடங்கம் முதலியவுரைத்து நான்கு சந்தி செய்வார் இலை தோதுவார்.

ஆ — சோமுகன் கவர்ந்து கடலிலொளித்தபோது, நீரு க்கு அழியாத தென்பதை மாத்திரம் விளக் கியது.

த — பிள்ளையார் சமண வாதம் புரிந்த காலை நீருக்கும் நெருப்பிற்கும் அழியாததென்பதை விளக் கியது.

ஆ — இதனைச் செய்தபின் பாசிவனிடம் அநேகர் வணங்கி நோன்புநூற்றிக் கேட்டுக் கொண்டனர்.

த — இதனைச்செய்யுங் காலத்திலேயே பாசிவனார், தம் மாலாகவேண்டியவற்றை யேவலாள்போலியற்றிக் கீதவிருப்ப னெங்ஙனம் பாடகற்கிப்பல்லவிகூறுக இப்பதங் கூறுக வென்று தானாகவெடுத்துக்கொடுத் தவன்பாடக்கேட்டுவகையங்கடலிற் படிவனோ, அது சிவனை அடியெடுத்துக் கொடுத்து இரந்து மன்றாடிப் பாடக்கேட்டுக் களித்தமையாலன்றோ மன்றாடி யன்றாடியென்னும் பெயர் கொள்ளாமே யெஞ்ஞான்றும் மன்றாடியென்னும் பெயரைக் கொண்டன ரென்க.

ஆ — இக்காலத்துப் பேசப்படாத பாஷையிலுள்ளது.

த — இக்காலத்துப் பேசப்படும் பாஷையிலுள்ளது.

ஆ — தான் ஓதப்பெறும் உத்தரதேசத்துச் சிவாலயங்கள் பெரும்பாலும் அழியப்பெற்றது.

த — தான் ஓதப்பெறும் தென்றேசத்துச் சிவாலயங்கள் பெரும்பாலும் அழியப்பெறாதது. *

இங்ஙனந் திராவிட வேதப் பெருமை யின்னும் பலகோடியில்லையோ? அவையெல்லாம் பல நாளாகப் பன்னாப் படைத்தார் உடம்பெல்லாங் காதுபெற்றார்க்குச் சொன்னாலுஞ் சொல்லித் தொலைவுபடுமோ? கேட்டுமுடியுமோ? இல்லை இல்லை. ஆகலான் அப்பாற்செல்வாம்.

---

* இதனை, "தேசமெல்லாம்விளக்கியதென்றிசை—யீசர்தோணிபுரத்துடனெங்கணும்—பூசனைக்குப்பொருந்துமிடம்பல—பேசிலத்திசையொவ்வாபிறதிசை" என்றதனானு மறிக.

### தமிழ்வேதம் பூர்வீகமே.

ஆரியர் சிலர் "ஆரிய வேதங்கள் சாக்ஷாத் பரப்பிரமத்தாற் செய்தவை. திராவிடவேதங்கள் மாணிக்கவாசகரின் பின்தோன்றியவை. எனவே கலியுகப்பாடல்கள். இருக்கு முதலிய வேதங்களோ யுகாயுகங்களாக உள்ளன. தமிழ்வேதப்பாடல்கள் மானுடராலியற்றப்பட்டன" என்று உண்மை யுணராமே நிந்திப்பர். அவையெல்லாம் பதிவாக்கென்றே கொள்ளப்படும் என்பது அதிப்பிரபலநியாயத்தாலே முன்னர் விளக்கப்பட்டது. அன்றியும்,

𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌂 𑌭𑌗𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌮𑌿 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌮𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 எனச் சாந்தோக்கியச் சுருதியிலே ஏழாவது பிரபாடகத்திலே கூறியாங்கு ஐந்தாம் வேதமென்று புகழப்பட்டதாகியுள்ள பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே, ஒன்பதாம் அமிசத்திலே, சிவபெருமான் திராவிடவேதத்தைத் திருவாய்மலர்ந்தருளினார் என்றும், அது பர்வதாகிருதியாக வெள்ளிமலைக்கண் விளங்குகிறதென்றும், அதன்பாகங்களையே ஆன்மாக்கட்கு வேண்டிய அளவு ஸ்ரீஞானசம்பந்தாதி யருளாளர்கள் பின் சிவாஞ்ஞைப்படி வெளிப்படுத்துவாரென்றுங் கூறப்பட்டமையானும், அங்ஙனே வெளிப்படுத்தியருளினமையானும் திராவிடவேதங்களும் பூர்வமே உள்ளன

வியாசர் வேதங்களை நான்காக வகுப்பதற்குமுன் தமிழ்மொழி யிருந்தவுண்மை* ஆசிரியர் தொல்காப்பியனார் செய்த இலக்கணப்பாயிரத்தில் மதுரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய பிராமணர் நன்கு விளக்கியதாஉங் கண்டுணர்க. அங்ஙனம் வச்சிரசூசிகோபநிடதச் சுருதியும் துவாபர யுகத்திற்றோன்றினார் வியாசர் என்று தெரிக்கின்றது. இவ்வாறு துவாபர யுகத்திற்றோன்றிய வியாசர், தமது குமாரரான சுகமுனிவர்க்கு யசுர்வேத பாகமாகிய சுகரகசியோபநிடதத்தை உபதேசித்ததாக வேதத்தாற் றெரிகிறது. அதற்கு முன் அப்பாகம் இன்றோ? அதர்வண வேதத்திலே ஒருசாகை சீதாபிராட்டியின் பெருமை அறைகின்றது. அவர் துவாபரயுகத்தாராகலின் அதன்பின்னர்த்தான் அப்பாகஞ் செய்யப்பட்டதோ? இன்னும் அதர்வணவேதபாகங்களிற் கிருஷ்ணர் விடயங்களும், இராமதாபினியில் இராமர் விடயங்களும், யசுர்வேதபாகமொன்றிற் சுவேதாசுவதர முனிவர் கூறியவும் காணப்படுகின்றன. இவர்களும் துவாபர யுகத்தவராகலின் அதற்குமுன் இவைகளில்லையென்றன்றோ தெரிகிறது. ஆகலால் ஆரிய வேதமும் பிற்காலத்தவரானும், மானுடர்களானும் வெளியிடப்பட்டனவே யெனின் ஆரியர் என் சொல்வர். வேதங்களைச் சொன்ன வியாசர், பிரசாபதி, பிரமன், ஆசுவலாயனர், யாஞ்ஞவற்கியர், தத்தாத்திரேயர். அநுமார், வருணன் முதலியோரை யெல்லாந் தேவாம்சமென்பர்

* "மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்—றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து—வாரிய முந்தமி ழும்முட னேசொல்லிக்—காரிகை யார்க்குங் கருணைசெய் தானே" என்னுந் திருமந்திரம் இங்கேசிந்திக்கற்பாலது.

போலும். அங்ஙனே யாமுந் தமிழ்மறையருளிச்செய்த வர்கள் யாவருந் தேவர்களுக்கும் மேற்பட்ட அம்சம் என்கின்றேம். "[illegible]" என்னும் யசுர்வேதசாகை வசனப்படி, பழையகற்பங்களிற் பிரமத்தால் வெளியிடப்பட்ட சுருதிகளையே பின்னர்ப் பலப்பல இருடிகள் தம்வாக்குப்போலக் கூறினரென்பர்போலும். அங்ஙனுயின், தமிழ்வேதமு மவ்வணமே பூர்வத்திற் பிரமத்தான் வெளிப்படுத்தி யருளப்பெற்றுப் பின்னர்த் திருஞானசம்பந்தசுவாமிகள் முதலாயினோரால் வெளிப்படுத்தியருளப்பெற்றதென்கின்றேம்.

அன்றியுந் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநாவுக்கரசுசுவாமிகள் சுந்தரமூர்த்திசுவாமிகள் தாங்கள் அருளிச்செய்த திருப்பாசுரங்களிலே பிரமமாகிய பரசிவனால் அருளப்பட்ட ஆரியவேதம், தமிழ்வேதம் என்னும் இரண்டனையும் புகழ்கின்றனர். ஆரியவேதத்தை ஆரியம் என்றும், தமிழ்வேதத்தைத் தமிழ் என்றும் உரைத்தருளினர்.

திருவெங்குரு. (௧ - திருமுறை.)

ஆதிய வருமறை யிருமை யலர்கொடு
வோதிய ருணர்வுடை யோரே.

அச்சிறுபாக்கம். (௧ - திருமுறை.)

தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர.
வம்மலர்க் கொன்றை யணிந்த வெம்மடிகள்.

திருக்கடம்பந்துறை. (௫ - திருமுறை.)

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்க்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே.

திருவாவடுதுறை. (௬ - திருமுறை.)

பந்தணவு மெல்விரலாள் பாகன் றன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் றன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானை.

திருமறைக்காடு. (௬ - திருமுறை.)

* முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்.

திருவீழிமிழலை. ( ௭ - திருமுறை )

நம்பினார்க்கருள் செய்யுமந்தணர்
நான்மறைக்கிட மாயவேள்வியுள்.

என அருளிச்செய்தமைகாண்க. ஈண்டுக் காட்டப்பட்ட தமிழ்வேதத் திருப்பாசுரங்களிலே 'ஆரியந்தமிழ்' 'செந்தமிழ் ஆரியம்' 'முத்தமிழ் நான்மறை' என்பவற்றாற் குறிக்கப்பட்டன அவ்வம்மொழி மறைகளே யென்பது மறுக்கப்படாத விடயமாம். ஆரியபாஷை, தமிழ்ப்பாஷை என்று கூறுதற்காங்குள்ள சத்திக்கிரகங்கள் இடங்கொடாவென்க. இன்னும் அளப்பில கூற்றுக்களுள்ளன.

---

* சதாசிவ தத்துவ முத்தமிழ் வேதம் என்ற திருமந்திரம் இங்கே கவனிக்கற்பாலது.

அவையெலாம் விரிவு மாகலி னீண்டுக் காட்டப்பட்டில. ஆங்காங்குக்கண்டுகொள்க.

இன்னும் பூர்வதிராவிடவேதத்தைச் சாரமாகவுடைய தமிழ்மறைகளுளொன்றாய திருவாசகமுந் திருக்கோவையாரும் இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்திற் செய்தருளப்பட்டன வென்று தெரிகிறது. அதனைச் சிறிதுவிவரித்துக் காட்டுவாம். மாணிக்கவாசகசுவாமிகள் இருந்த காலம் அரிமர்த்தனபாண்டியர்காலமென்பது நன்கு விளங்கும். அவர்காலத்தைப் பலரும் பலவகையாக் கூறுவர். சில ஆங்கிலக் கல்வியார் சுமார் இரண்டாயிரம் வருடத்திற்கு முன் இருந்தார் என்றும், சிலர் ஆயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்குமுன் இருந்தார் என்றும், சிலர் வேறுவகையாகவுங் கூறுநிற்பர். நாம் ஆராயுங்கால், "நரியைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்—பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்" என்று மணிவாசகப்பிரான் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

நரியைப்பரியாக்கிய இடம் சம்புகாச்வகம் என்று சொல்லப்படும். அங்ஙனஞ் சோமசுந்தரக்கடவுள் சம்புகங்களை (நரிகளை) அசுவங்களாக்கிய திருவிளையாடல் இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்திலே நடந்ததாகப் பிரமகைவர்த்தமகாபுராணங் கூறுகின்றது. எங்ஙனமெனில்,

ஶ்வேதவராஹ கல்பேஸ்மிந் த்ரேதாயாம் ஜம்புகா
ஶ்வகா| ஸாவதிர் கல்யாண ஸுந்தரேஶ்வரோ வாகமே
ளயாமெ| க்ருதே ப்ரஹ்மவநம்நாம த்ரேதாயாம் ஜம்பு

காச்வகம் | த்வாபரே து ப்ருகுக்கச்சம் சந்திரலேகா கலௌயுகே | என்னும் பிரமகைவர்த்தபுராண சுலோகங்கள் கிருதயுகத்திற் பிரமவனம் என்றும், திரேதாயுகத்திற் சம்புகாசுவகம் என்றும், துவாபரயுகத்திற் பிருகுக்கச்சம் என்றும், கலியுகத்திற் சந்திரலேகை என்றும் (அவ்விடம்) பெயர்பெறுமெனத் தெரிவிக்கின்றன. கலியுகத்திற் சந்திரலேகை யெனப்படுமென்ற வித்தலம் சந்தலை யெனவழங்கப்படுகிறது. இதிலிருந்துதான் சிவபெருமான் நரிகளைத் திரட்டிக் குதிரைகளாக்கிக்கொண்டு வந்தனர். அதனாற் சம்புகாச்வகம் எனப் பெயர்பெற்ற தென்க. இதன்விரிவைப் பிரமகைவர்த்தபுராணம் சுமந்துமேதவவர்மாசம்வாதத்திற் பரக்கக்காண்க. இங்ஙனம் அத்திருவிளையாடல் அக்காலத்ததாகலிற் றிருவாதவூரடிகளும் திரேதாயுகத்திலிருந்து திருக்கோவை திருவாசகங்களாகிய தமிழ்மறைகளை அருளினர் என்பது விசிதமாகின்றது. அதுபற்றியே "பக்தாபீர்தம் விச்வஜநாநுமோதநம் சர்வார்த்ததம் ஸ்ரீமணிவாசகவாங்மயம்-ஸகல ரசாகோபநிஷத் ஸமாகமம் நமாம்யகம் த்ராவிட வேதசாகரம்" எனப்பண்டித நவரத்தினங்களுட் கடகர்ப்பரர் என்பார் கூறிய மணிவாசகதீபிகை கூறுகின்றது. ஆகவே இத்தமிழ்மறையின் பின்வந்த ஆரியமறைகளுமுள. ஆகலாற் றிராவிடவேதம் ஆரியமறைபோலப் பூர்வமேயுளதென்க.

## திருக்கடைக்காப்பு.

தேவாரத் திருப்பதிகங்கடோறும் இறுதியில் வருஉம் திருப்பாசுரங்கள் திருக்கடைக்காப்பு எனப் பெயர்பெறும். திரு - அழகு, மேன்மை. கடை - இறுதி.

காப்பு - காத்தல். காத்தற்பயன் கூறுஞ் செய்யுள் காப்புமெனப் பெயர்பெற்றது. திருஞானசம்பந்தசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், காரைக்காலம்மையார், திருவிசைப்பா அருளிச்செய்த நாயன்மார் என்னும் இவர்களே திருக்கடைக்காப்புக் கூறி அவற்றில் தத்தம் திருப்பெயர்களும், திருப்பதிகப்பயன்களும் உரைத்துளார். "ஆயிரமுகத்தா னகன்ற தாயினும்—பாயிர மில்லது பனுவலன்றே" என்பது செந்தமிழிலக்கண விதியாகலின் அங்ஙனே ஆரியவேதங்கள் கூறுவதற்கும் விதிமாகேசுரர் கூறினர். என்னை? ஒருபொருளுரைப்பானெடுத்தியாப்பான் புக்க வாசிரியர், அதனை எழுவகையானிரூபணஞ்செய்து காட்டல்வேண்டுமென்ப. அவை உபக்கிரமம், உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அருத்தவாதம், உபபத்தி என்பனவாம். இவையிற்றைச் சத்தலிங்கமென்ப வடநூலார். இவ்வெழுவகை இலிங்கங்களானும் ஆரியவேத சாகைகண் முற்றியுள்ளனவாம். அங்ஙனமே வேதசாகைகள் ஒவ்வொன்றன் இறுதிக்கண்ணும் லிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. எவ்வெவ்வுபநிடதங்களை யாரியார் கூறினரோ அவ்வவரே பலலிங்கங்களையும் சாகாவிறுதிக்கண் உரைத்துளார். ஆகலாற்றிருஞானசம்பந்தர் முதலாய ஆசாரியசுவாமிகளும் தாம் அருளியது தமிழ்வேதமாகலான் அம்முறைமைபற்றிப் பலலிங்கங்களென்னு நூற்பயனையுந் தாமே பதிகவிறுதிக்கண் உரைத்தருளினார்கள்.

இருக்குவேத அக்ஷமாலிக சாகையைக் குகப்பெருமானார், பிரமன் வேண்டிக்கொள்ள, அவற்கு உபதேசித்து இறுதிக்கண், ப்ராஜாயோநாராத்ருக்ஷதா

பாபம் நாஶயதி| ஸாயமதீயாநோ திவஸக்ருதம் பாபம் நாஶயதி| தத்ஸாயம் ப்ராதஃ ப்ரயுஞ்ஜாநோ பாபோ(அ)பாபோ பவதி| ஏவமக்ஷமாலிகயா ஜப்தோ மந்த்ரஸ்ஸத்யஸ்ஸித்திகரோ பவதி| ப்ராதர் தீயானோ ராத்ரிக் கிருதம் பாபம் நாசயதி | சாயமதீ யானோ திவஸக் கிருதம் பாபம் நாசயதி | தத்சாயம் ப்ராதம் ப்ரயும் ஜாநம் பாபோ பாபோ பவதி | ஏவமேக்ஷமாலிகயாஜப்தோ மந்த்ரஸ் ஸத்யஸ் ஸித்திகரோ பவதி | எனத் தாமே பலலிங்கமுங் கூறியருளினார்.

அங்ஙனே யசுர்வேதக் கைவல்ய சாகையைப் பகவான் பரமசிவனார் ருத்திராசாரிய ஆசுவலாயனருக்கு அறைந்து இறுதிக்கண், யஶ்ஶதருத்ரியமதீதே ஸோ(அ)க்நிபூதோ பவதி| ஸ வாயுபூதோ பவதி| ஸுவர்ணஸ்தேயாத்பூதோ பவதி| ஸுராபாநாத்பூதோ பவதி| ப்ரஹ்மஹத்யாத்பூதோ பவதி| க்ருத்யாக்ருத்யாத்பூதோ பவதி| தஸ்மாதவிமுக்தமாஶ்ரிதோ பவதி| என்று, தாமே நூற்பயனாகிய பலலிங்கத்தையுந் திருவாய் மலர்ந்தருளினார்.

கிருஷ்ண யசுர்வேத மந்திரசாகையை அகத்தியாச்சிரமிகளாகிய சிவஞானியர்க்குச் சுவேதாசுவதர மகாமுனிவனார் உபதேசித்து, இறுதிக்கண் ஶிவமேஷ்யதி| துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி என்று தாமே பலலிங்கமாகிய நூற்பயனும் உரைத்துளார்.

சாமவேத பாக ருத்திராக்க சாகையைப் புசுண்ட மகாமுனிவர்க்கு உபதேசித்தருளிய காலாக்கினி ருத்திர பகவான் முடிவில் தமேதம் தமேஷோக்நிராஹவதி| ஸகலஸ்தாவரஜங்கமம் என்றுதொடங்கி, ஸ ஸர்வேஷாம் ஸூத்ராணாமாவர்த்தோ பவதி| ஸர்வேஷு தீர்த்தேஷு ஸ்நாதோ பவதி| ஸஹஸ்ர ருத்ர ஸாவர்ணேய ஸாமஜாபீ பவதி| ந தஸ்ய போ மவாதகெஷ்ஹ்யோ பவதி| என்று தாமே நூற்பயனுரைத்தருளினர்.

அதர்வவேத நவம சாகைகளில் ஒன்றாய அதர்வசிகையை எல்லார்க்குந் தெரிந்த அதர்வணவிருடியனார், பைப்பலாதர், ஆங்கிரசு, சனற்குமாரர் என்னு மூவர்க்கும் உபதேசித்து, இறுதியில், "ஸதாபயீத்வி ஜாமஷ்டாவாஸாம்ஸி கேஷ்விதேதுஷ்யதே| ஸதாபயீத்விஜாமஷ்டாவாஸாம்ஸி கேஷ்விதேதுஷ்யதே" என்று தாமே பலலிங்கமாகிய நூற்பயனுங் கூறினர்.

இங்ஙனமே ஆரியவேத சாகைகளொவ்வொன்றின் முடிவினும் அவ்வவற்றைக் கூறிய ஆசிரியர்களே நூற்பயனு முரைத்தார் என்று நான்கு வேதசாகைகளினின்றும் வசனங்களெடுத்துக்காட்டுவும். இதனானே தமிழ்வேதத்திருப்பதிக இறுதிக்கண் நூற்பயனுரைத்த

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-20.


வின்றியமையாத தொன்றென்பதூஉம், ஞானசம்பந்தர் முதலிய திருவருளாளப்பெருந்தகையார் தாங்களே நூற்பயனுரைத்தருளினமை சால்பென்பதூஉம் யாவரும் இனிதின் உணர்ந்துகொள்க. இங்ஙனமிருத்தலால், "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்—தான்றற் புகழ்த றகுதியின்றே" என்னும் விதி யிவ்வருளாளர் மாட்டுச் செல்லாதென்க.

தமிழ்மறைப்பாராயணபலன்.

தமிழ்மறைக்கண் உள்ள திருப்பதிகங்களை அத்தியயனம் பண்ணும் பலன்கள் அவ்வப்பதிகங்களினிடத்தே உரைத்தருளப்பட்டுள்ளன. அதனாலேதமிழ்மறை எல்லாப்பயன்களையுங் கொடுக்குமோரருமறையென்பது பெறப்படுகின்றது. அத் தமிழ்மறைத் திருப்பதிகங்களுள் சில சிவஞானத்தைக்கொடுப்பனவும், சில போகத்தைக் கொடுப்பனவும், சில சித்திகளைக் கொடுப்பனவும், சில முத்திகளைக் கொடுப்பனவும், சில இவையல்லாத பிறபயன்களைக்கொடுப்பனவுமாக விளங்கும். ஆகலால் புத்தியை விரும்பினோர் அதனையருளுந் திருப்பதிகங்களையும், முத்தியை விரும்பினோர் அதனை யருளுந் திருப்பதிகங்களையும், இரண்டனையும் விரும்பினோர் அவ்விரண்டனையுந் தரும்திருப்பதிகங்களையும் பாராயணஞ் செய்யக்கடவர். திருக்கடைக் காப்புக்களைக்கொண்டு இவை புத்தியளிப்பன, இவை முத்தி தருவன, இவை சித்தி கொடுப்பன, இவை யெல்லாந் தருவனவென்று அறிந்து கொள்க. திருக்கடைக்காப்பில்லாது வரூஉந் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களை, அருளிய காலம், காரணம், பொருள் முத

வியவற்றை ஆய்ந்து இன்னது இன்னபலன்கொடுக்குமெனக்கொள்க. தமிழ்மறையிற் பாராயணபலன் அதிகமாக உள்ளன. அவற்றை எல்லாம் எடுத்துக்காட்டின் மிகவிரியுமாகலின் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவற்றுட் டாலீபுலாகநியாயமாகச் சில தொகுத்துக்காட்டுவாம்.

"கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே. உயர்ந்தாரொடுங் கூடுவரே. பழியொடு பாவமிலரே. உம்பராரெதிர்கொள வுயர்பதியணைவரே. வணங்கியேத்த மருவாபிணிதானே. வானநாடினி தாள்வரிம் மாநிலத்தே. வந்துவார்க் கிடர் கெடுமே. தீவினைநோயிலராய்—ஒத்தமைந்த வுயர்வானிலுயர்வினொடோங்குவரே. நற்றமிழ் சொல்ல வல்லவர் நல்லவரே. அடையாவினைகளமரலோகமாள்வரே. அல்லலோ டருவினை யறுதலாணையே. புகழ்தாங்குவாரே. தொல்வினை தீர்த லெளிதாமே. பொன்னடைநதார போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே. விண்ணவரோ டினிதாக வீற்றிருப்பா ரவர்தாமே. விண்ணுலக மெதிர்கொள்ள விரும்புவரே. சிவகதியைப் பெறுவாரே. பாரொடுவிண் பாலகரே." இங்ஙனம் பல வருவன. அவையெலாங் கண்டுகொள்க.

## திருமுறைகள் ஓதும்விதி.

ஆரியத்தின்கணுள்ள வேதசிவாகமங்கள் ஓதுவதற்கு அதிகாரிகள், ஓதுமுறைமை, இடம், காலம், பயன் முதலிய இலக்கணங்கள் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன. அவற்றுளாரியவேதங்களில், "வேதாங்கே பரமம் குஹ்யம்புராகல்பப் பிரசோதிதம் | நாப்பிர சாந்தாய தாதவ்யம் நாபுத்ராய நாசிஷ்யாயவாபுந: | யஸ்யதேவே பராபு

க்கி: யதாதேவே ததாகுரௌ | தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந: | எனவரூஉம் யசுர்வேத வாக்கியங்களின்படி, வேதாந்தத்திற் பரமரகசியமாகவும், பழைய கற்பங்களில் வெளியிடப்பட்டதாகவுமுள்ள இதனைப் புத்திரனில்லாதவன், சீடனில்லாதவன், சாந்தியடையாதவன் என்னுமிவர்க்குக் கொடுத்தறகாது என்பதும், எவனுக்குப் பரசிவனிடத்தில் நல்ல அன்புண்டோ, சிவனிடத்துள்ளதுபோல ஆசாரியர்களிடத்துப் பத்தி யாருக்கு உண்டோ, அம்மேலோருக்கே இவை விளங்கும் என்பதும் தெரிகிறது.

ப்³ரஹ்மவிஷ்ணுருத்³ரேந்த்³ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்³ரியாணி ஸஹ பூ⁴தைர் ந காரணம் காரணாநாம் த்⁴யாதா காரணம் த்⁴யேயம் ஸர்வைச்வர்யஸம்பந்ந: ஸர்வேச்வர: ஶம்பு⁴ராகாஶமத்⁴யே த்⁴ருவ ஸ்தப்³த்⁴வாதி⁴கம் க்ஷணமேகம் க்ரதுஶதஸ்யாபி சதுஸ்ஸப்ததியத்ப²லம் தத³வாப்நோதி க்ருத்ஸ்நமோங்காரக³த்யா ஸர்வத்⁴யாநயோகஜ்ஞாநாநாம் யத்ப²லமோங்காரோ வேத³ பர ஈஶோ வா ஶிவ ஏகோ த்⁴யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய

(As printed, in Grantha letters:)
ப்³ரஹ்மவிஷ்ணுருத்³ரம் வரிஷ்டாம் ஸஹ ஸம் ஹெஸவ்ருஜோ நாம நிரஞ்ஜனம்| எனக்கைவல்லியசாகையினும், நாஸிகாய க்ருதவர்ணாய ஷாஸ்வதாய யுதா³ந்தாய | ஷா. ஹிகாய ந்ருஸிம்ஹாய ஸோமாய த்ர்யக்ஷாய ஷிணே| ஸர்வத்ராய ஸர்வஜ்ஞாய ஸர்வதாய ஸர்வேஶ்வராய நம:| ஶர்வாய ஸர்வகாய ஷாந்தாய ஶாந்த்யாய ஜக்ஷஜேசதவே| ஶிவஹஸ்தாய ஷாந்த ஷ்ரோம் எனவரூஉம் அதர்வணவேத வாக்கியங்களானும் அவ்வுண்மை பெறப்படும். ஆகலாற் றமிழ்மறைகள் ஓதுமுறையையுஞ் சிறிது கூறுவாம்.

பன்னிருதிருமுறைகளும் பன்னிரு மந்திரங்களைப் பொருளாகலானும், முத்தமிழ் விரவியனவாகலானும், ஒன்றிரண்டென வகுக்கப்பட்டனவாகலானுந் தொடர்ச்சி யுடையனவென்க.

எனவே தேவாரம் ஓதினுல் மற்றைய திருவாசக முதலிய திருமுறைகளை வரிசைக்கிரமமாக ஓதி முடிக்க வேண்டுமென்பதுணர்க. பூதசுத்தி முதலிய ஐவகைச்சு. த்திகளு ளொன்று விடுக்கப்படினும், சோடச உபசார ங்களுளொன்று நீக்கப்படினும், பஞ்சப்பிரமசடங்கங்க ளுள் ஒன்றுகழிக்கப்படினும் உடம்பின்கணுள்ள அவய வங்கள் பலவற்றுள் ஒருறுப்புக் குறைக்கப்படினும் எங் ஙனங் குற்றமோ அங்ஙனம் ஒருதிருமுறை நீக்கப்படிற் குற்றமாம். பன்னிருதிருமுறைகளையும் வரிசையாக ஓதி வரல் முப்பானிரண்டு இலக்கணங்களுந் தவறுது பெற்ற உடல்போலாம். சிலவற்றைக் கழித்தோதல் அவ்வுறுப் பிலக்கணங்கள் சிலகழியப்பெற்ற அங்கம் போலாம். ஆகலாற் றவறுது ஓதுக. சிலர் தேவாரம் முதலியவற் றையோதிப் பெரியபுராணங்கூறி முடித்து, அதன்பின் னர்ப் பரம்பரை வழக்கென்று திருக்கோவையாரை இறு திக்கண் ஓதலும், சிலர் "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்னுந் திருப்பாட்டை ஓதி அதன்பின்னர் "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" என்னுந் தேவா ரத்திருப்பாசுரத்தை ஓதலும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என் னுமிவ்வைந்து மன்றி மற்றைய திருமுறைகள் பண்வகு க்கப்படாமையானும், நேரே தோத்திரரூபங்களாக இல் லாமையானும் அவையோதற்பாலன வல்லவென்று நீத்து, ஐந்தைமாத்திரம் ஓதலும் கூடாவாம்.

பன்னிரு திருமுறைகளையும் ஓதுகின்றவர் ஓது வார் பண்டாரங்கள் என்று சொல்லப்படுவார். அங்ங னம் விதிப்படி ஓதுகின்ற அவரைச் சிவபெருமானுகவே

பாவித்தல் வேண்டும். அதுபற்றியே சிவபெருமானு க்கும் முத்திக்கு முரியதாய "பண்டாரம்" என்னும் பெயரான் அவர் அழைக்கப்பட்டார். "மூலபண்டாரம் வழங்கு கின்றான் வந்து முந்துமினே" என்று தமிழ்ம றை யுரைப்பதுங் காண்க. பண்டாரம் என்னுஞ் சொற் பொருள் அரும்பொருள் இருக்குமிடம் என்பது. கருவூ லம், பொக்கிஷம் என்பனவும் இப்பொருளவே. அரும் பொருளெவையெனில் பன்னிருதிருமுறைகளேயாம். இங்ஙனமாய அரும்பொருட்டிருமுறைகள் அவர் உள் ளத்தின்கட் கிடக்கப்பெறுதலான் அவர்க்கு அச்சீரிய பெயர் போந்ததென்க. பண்டாரம் என்னும் மகாமகி மைபொருந்திய இப்பெயரை இக்காலத்து மது மாமிச பக்ஷணமுடையராய், ஆசாரமில்லாதவராய் உள்ள வள் ளுவர்முதலாயினோர் வைத்துக்கொண்டு ஐயம்வாங்கி யும், அன்னக்காவடியெடுத்தும், பிணத்தின்முன்னர்ப் பாட்டுக்களைப்பாடியும் அவ்வருமையைப் போக்கிக்கொ ண்டனர். நிற்க. ஓதுவாரில்லாவிடின் ஏனையோரும் ஓத லாம். அவரும் பொதுவாக உரைக்குமிடத்து மதுமாமி சபக்ஷணமில்லாதவராய், சைவாசார முடையவராய், சிவதீக்ஷைபெற்றவராய், விபூதிருத்திராக்கதாரணமு டையவராய் இருத்தல் வேண்டும். இன்னும் அவர், இன் றியமையாத இலக்கிய இலக்கணங்களுடன் நிகண்டு தார் க்கிகமுதலியவற்றிற் பயிற்சியுடையவராய், பதி பசு பா சம் என்னுந் திரிபதார்த்த இலக்கணங்களையு முணர்த் தும் சிவஞானபோத முதலிய சைவசித்தாந்தசாத்திரங் கள் பதினான்கிலும், பண்டாரசாத்திரங்கள் பதினான்கி லும் வல்லவராய், வேதசிவாகமப்பயிற்சி யுடையவராய், இசைத்தமிழ், நாடகத்தமிழினுமுணர்ச்சியுடையராய்,

பண்களைச் செவ்வனே கற்றறிந்தவராய், சிவபத்தி சிவனடியார்பத்தி திருமுறைப்பத்தி என்னு மிவையுடையராய், உலகமெங்கணுந் திருமுறைப்பெருமை விளங்குக என்னும் எண்ணமுடையரா யிருக்கப்பெறுவோராயிருப்பின் சர்க்கரைப்பந்தரிற் றேன்மாரிபொழிந்தாற்போலுந் தகைமைத்தே.

இவ்வியல்பினரல்லாதவர், ஐயமேற்றற்காகவே ஓதுந் தொழிலை மேற்கொண்டவர், ஆசை ஒன்றையே ஆசைப்பட்டோதுபவர், பண்வழிப்பாடாது தாம் நினைத்தபடியெல்லாம் பாடுவோர், சிவதீக்ஷையில்லாதவர், சிவசின்னமில்லாதவர், சிவபெருமானுக்கு ஒப்பாக வேறொரு தெய்வத்தையுரைக்குஞ் சிவநிந்தகர், திருமுறைகளை ஓதும்பொழுது அதற்கு முன்னும்பின்னும் இடையிலும் வேறுபாடல்களையாவது கீர்த்தனைகளையாவது பாடுவோர், ஆசௌசமுடையவர், ஆசாரமில்லாதவர், நித்தியகடன் முடிக்காதவர் இவர்கள் திருமுறைகளைத் தீண்டுதற்கும் அதிகாரிகளல்லர் என்க. சிவபெருமானுக்கு அடியவராகிய பத்தர் என்பவர் யாவரென்று ஆராயுங்காலத்தில் திருமுறைகளை எவர் மெய்யன்புடன் ஓதுகின்றாரோ, ஓதுவிக்கின்றாரோ, கேட்கின்றாரோ, கேட்பிக்கின்றாரோ, கேட்டக்கால் பரவசமுறீஇ ஆனந்தக்கூத்தாடுகின்றாரோ, திருமுறைகளை எவர் ஆன்மார்த்த பூசையாகப் பூசிக்கின்றாரோ, எவர் அவற்றைப் பரப்புகின்றாரோ, பரப்புவிக்கின்றாரோ, அவர்களே சிவனடியாராகிய சிவபத்தரென்று சொல்லப்படுவார். இக்கருத்தைப்பற்றியன்றே, திருஞானசம்பந்தசுவாமிகள், "பந்தமார் தமிழ்பத்தும் வல்லவர் பத்தரா குவரே" "பயில்

வொடு கற்றுவல்லவ ருலகினிலடியவரே" எனவும், சுந்
தரமூர்த்திசுவாமிகள் தாம் அருளிய திருப்பதிகத்தி
லே, "இம்மாலை**** பாலரும் பாவித்தொழ வல்லார்
பத்தராய் முத்திதாம் பெறுவாரே" எனவும் திருவாய்
மலர்ந்தருளினார்கள். இன்னும் இத்திருமுறைகளையோ
துவார் மேலோர் என்று அவற்றை யருளியவரே ஒரு
முறை யுரைக்காது மும்முறை யுரைப்பாராயின் அவர்
பெருமை நாமாபுகல வல்லேம். ஒரு திருப்பதிகத்திலே
"விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே" என்று
அருளினார். ஒரோவிடங்களில் அவரை ஈசனென்கிறார்.
அதனை, "இன்னிசையாற் பாடவல்லோ ரிருநிலத்தி
லீசனென்னு மியல்பினோரே" என்றதனாலறிக.

திருமுறைகளை ஓதுகின்றவர் முன்னைய இலக்க
ணமுடையவராய் ஒருவராவது, பலர்சேர்ந்தாவது ஓத
க்கடவர். பலர்சேர்ந்து ஓதுவதே விசேடமாகும். அது
"சம்பந்தன் செந்தமி—ழொருத்தராகிலும் பலர்களாகிலு
முரைசெய்வா ருயர்ந்தார்களே" என்று திருக்கண்டியூர்
வீரட்டத்திருப்பதிகத்திலே ஆளுடையபிள்ளையார் உ
ரைத்ததனாற் பெறுதும். இசைகற்றுவல்லவரே ஓதக்கே
ட்டல் வேண்டுமென்பது,

திருவலஞ்சுழி. உ - திருமுறை.

"மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை
வயற்காழி—நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை—யாதரித் திசைகற்று வல்லார்
சொலக் கேட்டுகந் தவர்தம்மை—வாதியா வினை மறுமை
க்கு மிம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே." என்னுந்
திருக்கடைக்காப்பாற் பெற்றாம்.

ஓதும்போது குற்றம் வாராமல் ஓதல்வேண்டும். குற்றமாவது உடற்றொழிற் குற்றம், பாடுந்தொழிற் குற்றம், பண்குற்றம், எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை, ஓதும்வரிசைப்பிறழ்ச்சி என்பனவாம். வெள்ளோசையுடைமை, பேய்கத்தினாற்போலக் கத்துதல், காகத்தைப்போற் கத்துதல், ஒரு ஓசையானதன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல், குறைபடுங்கட்டோசை, ஒருபண் ராகம் பாட வேறொரு பண்ணிலே விலங்கி நின்று இரட்டல், ஒதுக்கிப் பாடுதல், நாசியாற் பாடுதல், வாயைக் குகைபோலத்திறத்தல், வாய்கோணுதல், அழுமுகங்காட்டல், கண்கள் ஆடுதல், தலைநடுங்குதல், புருவமேறுதல், வயிறுகுழிய மூச்சைவாங்குதல், மிடறுவீங்குதல், பற்கள் காட்டல் இவையேபாடற் றொழிலினும் உடற்றொழிலினும் வருங்குற்றங்களாம். தக்கேசிப் பண்ணாகப்பாடவேண்டியதைக் கொல்லிப் பண்ணிற் பாடுவதும், தக்கேசிப்பண்ணினும் இரண்டாங்கட்டளையாற் பாடவேண்டியதை முதலாங் கட்டளையாற் பாடுதலும் பண் குற்றமாம். எழுத்துக்கள் வழுவப் பாடலும், சொற்கள் வழுவப் பாடுதலும், பொருள்கள் திரிபுற வோதலும் எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றங்களாம். துவட்டாவென்பவன் எழுத்தொலி பிறழவுச்சரித்து யாகம் புரிந்தமையால் இந்திரனாற் றலையறுப்புண்டான். இந்திரன் பிரமகத்தியால் வருந்தினான். அன்னதேபோல இக்குற்றங்கணிகழுமாயின், ஓதுவோர் ஓதுவித்தோர் கேட்டோர்யாவர்க்கும் பெருந்துன்பங்க ணேரிடுமென்றுணர்க.

ஓதும் வரிசைக் குற்றமாவது:—முதலாந்திருமுறையை முதலினும், இரண்டாவது திருமுறையை அதற்கடுக்கவும், ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௧௦, ௧௧, ௧௨, என்னு மிவைகளை அவ்வவற்றிற்கு அடுக்கவும், இங்ஙனே வரிசையாக ஓதி முடிக்காது முன்னும்பின்னும்மாறியும் திருமுறைகளையும் திருமுறைகளல்லாதவற்றையும் ஓதலாம். பன்னிருதிருமுறைகளை யோதுங்கால் வேறொன்றனையும் ஓதல்கூடாது. இருக்காதி வேதங்களையத்தியயனம் பண்ணுவார் அக்காலத்தில் வேறெவ்வித கிரந்தங்களையும் எங்ஙனமெடுத்துச் சொல்லாரோ அதுபோலத் திருமுறைப் பாராயணத்துங் கொள்க. அங்ஙனம் வேறொன்றனை யோதுவது கைக்கணுள்ள மாற்றுயர்ந்த ஆணிப்பொன்னை யெறிந்து விட்டு, அயத்தூளை யரிப்பரிக்கத் தொடங்கியதுபோலவும், ஏகசக்கிராதிபதியைச்சபைக்கண் வந்திக்காது ஏழை வறிய குருட்டு நோயாளனொருவனைப்பூசிப்பதுபோலவும் முடிந்து பழிபாதகங்களைப் பயக்கு மென்க. சிலர் தேவாரம் முதலிய திருமுறைகளையோதுங் காலத்திற் றிருப்பாசுரத்திலில்லாதமொழிகளைச் சேர்த்துக் கூறுகின்றூர்கள். அதற்கு உதாரணமாக "வடிவுடை மழுவேந்தி - மதகரி யுரிபோர்த்து" என்று ஓதற் பாலதை "வடிவுடை மழுவேந்தி (சம்போசங்கரா) மதகரி யுரிபோர்த்து (மாதேவா) என்று பாடுகின்றூர்கள். அது குற்றமும் பாவமுமாம். அச்சொற்கள் சிவநாமங்களாயினுமாக; அவற்றூற் கேட்பார்க்குப் பத்தி விளையினும் விளைக; அங்ஙனம் கூறுதல் தகாதென்பதே ஆன்றோர் உளக்கிடக்கையாம். எற்றூலோ வெனின், ஆரிய மறை யத்தியயனஞ் செய்வார் ஆங்காங்குப் பகவான் றிருநாமத்தை

எங்ஙனம் உச்சரிக்காரோ உச்சரித்தக்கால் வேதசந்தபங்கம் அர்த்தபங்கம் எங்ஙனம் விளையுமோ, அன்னதே போலத் தமிழ்மறைகளுக்கும் ஒருபதங்கூட்டினுஞ் சந்தபங்கமுதலியன உண்டாகுமாகலானென்க. இவ்வாறுய குற்றங்களை யெல்லாம் நீக்கியோதவல்லவரே பாராயணம் செய்தற்கு உரியரென்றுணர்க. இவையிற்றையெல்லா மடக்கியே சமயாசாரிய சுவாமிகளாகிய திருமறைக்காரர், ஓதுவதற்குங் கேட்பதற்கும் உரிய அதிகாரிகளை வகுத்தருளினார் அவைவருமாறு:—

"சம்பந்தனுரை பங்கநீங்கப் பாடவல்லவர்" "ஊனமின் மொழிவலார்க்குயருமின்பமே" "பயில்வொடு கற்றுவல்ல வருலகினி லடியவரே" "கூறவல்லாரையுங் கேட்க வல்லாரையுங் குற்றங்கள் குறுகாவே" "சொல்லுதல் கேட்டல் வல்லாரவர்க்கும்" "நல்லுரை ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச்—சொல்லிடல் கேட்டல் வல்லார்" "பாடலிவை பத்துஞ்—சொல்லுவார்க்குங் கேட்பார்க்குந் துயரமில்லையே" "கூறுமாறு வல்லார்" "கோலத்தாற் பாடவல்லார்" "சம்பந்தனொண்டமிழ்களி—னணிகொண்ட பத்து மிசைபாடபத்த ரகல் வானமாள்வர் மிகவே" "காழியர்கோ னவில்பத்து மூனமின்றி யுரைசெயவல்லவர்" "உரியதொரிசைகொள வுரைசெய் நீதியர்" "வண்ண மூன்றுந் தெரிந்திசை பாடுவார்" "பண்கொளப் பாடவல்லார்க் கில்லை பாவமே" பண்ணாரப் பாடவல்லார்க் கில்லை பாவமே" என்ற இன்னோன்ன திருவாக்குகளே யாம்.

ஓதுங் காலத்தே சிலர் அங்கி யிட்டும், தாம்பூல முதலியன தரித்துக்கொண்டும், நகை புரிந்தும், பாய

விற் படுத்துக் கொண்டும், ஆசனம்முதலியவற்றி லிருந்து வீராசன மிட்டுக்கொண்டும், கால்களை நீட்டிக்கொண்டும், வாகனத்தி லிருந்தும், பாதரக்ஷை முதலியன காலின் மாட்டிக்கொண்டும், ஆலயங்களும் மூர்த்திகளும் கீழேயிருப்பத் தாம் மேன்மாளிகையி லுயரவிருந்து கொண்டும், ஒற்றை வஸ்திரந் தரித்துக்கொண்டும், மீசையை முறுக்குதல் கடித்தல் பற்களால் மெல்லல் கைகளாற்றடவல்களைச் செய்துகொண்டும், உத்தரீய மிட்டுக்கொண்டும், பிறகதைகளை இடையிடையே வசனித்துக்கொண்டும், மூக்கிற்குப் பொடிபோட்டுக்கொண்டும், தலையணை திண்டு முதலியனவற்றிற் சார்ந்துகொண்டும் ஓதலுங் கேட்டலுஞ் செய்கின்றார்கள். அது கூடாதென்க. நாடகங்களிலும், அன்பிலாரிருக்குமிடங்களிலும், புறச்சமயிகள் இருக்குமிடங்களிலும், அசுத்தமான தானங்களிலும், சனங்களின் முன்னும் ஆசௌசவீடுகளிலும் அநாவசிய காலங்களிலும் ஓதலுங் கேட்டலுமாகாவாம். சிலர் அநாசார நிறைந்த வேசிகளைக் கொண்டு பாடுவித்துக் கேட்கின்றனர். அது பாவம்! பாவம்!! மூக்காலும் பாவமே.

திருமுறைப் பாராயணத்திற்கு முன்னர்க் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் உட்கார்ந்து விநாயகரைத் தியானித்து, சிவபெருமானையும், உமாபிராட்டியாரையும், சமயாசாரியசுவாமிகள் நால்வரையும், திருத்தொண்டர் சீர்பரவுவாரையும் சிந்தித்து, வேதங்களை அத்தியயனம் பண்ணவாரம்பிக்குங்கால் ஆங்காங்குச் சொல்லப்பட்ட சாந்திமந்திரங்களை யுச்சரித்து ஓம் என்று தொடங்கிச் செய்தல்போல,

ரு

...MAHOPADHYAYA

ஒவ்வொரு திருப்பாட்டின் முதலினும் முடிவினும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லுக. "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பாசுரத்தையுந் திருக்கடைக் காப்பையும்*பாராயணஞ்செய்து விநாயகரைத் துதிக்க வேண்டுமேல்,

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

என்பது முதலாய விநாயகரை யுரைத்த திருப்பதிகங்களைக் கூறி, அப்பால் ஆளுடையபிள்ளையாரது பதிகங்களில் எதனைப்பாராயணம் பண்ணவேண்டுமோ அதுசெய்து, திருநாவுக்கரையர், திருநாவலூரர், மாணிக்கவாசகர் முதலாயினோர் திருப்பாசுரங்களைப் பாராயணஞ் செய்து பெரியபுராணங்கூறி முடிக்க. பெரியபுராணம் சொல்லப்பட்டால் அதன்பின் தேவாரமாவது ஏனைய திருமுறைகளாவது பாடற்க. அவசியமாயின், தேவாரங்கூறி வரிசையாக மற்றைய திருமுறைகளையும் பாடி முடிக்க.

கந்தாலயமாயிருப்பின் கந்தசுவாமியைப்பற்றிக் கூறும் தேவாரப்பதிகங்களையும், வீரபத்திராலயமாக இருப்பின் தக்கயாக தண்டத் திருப்பதிகங்களையும், அம்மையார் சந்நிதானமாக இருப்பின் அம்மையாரை விதந்துகூறிய திருப்பாசுரங்களையுந் தேவாரத்திற்சொல்லுக. தேவாரம் ஓதி முடிந்தவுடன் திருச்சிற்றம்பலம் என்று உச்சசுரமாக உச்சரிக்க.

* ஒவ்வொருபதிகத்தையும் முழுதும் ஓதலே விசேடம்.

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.


இவை ஓதுங்காலத்திலே கேட்பவர்கள் யாவரும் முற்கூறிய குற்றங்களின்றித் திரிகரணங்களு மொருமைப்பாடுற்றுப் பயபத்தியுடனிருந்து பிரமாஞ்சலி சகிதராகக் கேட்டல்வேண்டும். பிரமாஞ்சலியாவது சப்பாணியிட்டிருந்து கையிரண்டனையும் மார்பின் மாறிக் கட்டிக்கொண்டாவது, மார்பு நெற்றி உச்சி என்னுமிவ்விடங்களில் அஞ்சலித்துக்கொண்டாவது இருத்தல். கைகட்டுவதைப்பார்க்கினும் மார்பின்கண் அஞ்சலித்தலும், அதனினும் நெற்றிக்கண் அஞ்சலித்தலும், அதனினும் உச்சியிற் கைகூப்பலும் விசேடமாம். பாராயணஞ்செய்வோர் "நமப்பார்வதீபதே" என்றகாலை, கேட்போர் "அரகரமகாதேவ" என்று கூசாது உரக்க உச்சரிக்கக்கடவர். "சிற்சபேசா" என்னுங் காலைச் "சிவசிதம்பரம்" என்றுரைக்க. உரைக்காது கூசுவோரும், பெருமையானே அதனை வெறுக்கின்றவரும் நரகத்தையடைவர். இவ்வுண்மை, "அடிகளைச் சேர்த்திய பாட—றங்கையாற் றொழுது தந்நாவின் மேற்கொள்வார்" "இம்மாலை-பாரூரும் பாவித் தொழவல்லார்" எனச்சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியதனானன்கு புலப்படும். இவையெல்லாம் தய்வசமழிந்து மனமுருகுமெய்யன்பினர்க்கு விதியாகாவென்க. அன்பானே அவரெங்ஙனஞ் செய்யினும் பரசிவன் அருளுமென்பது ஆளுடையபிள்ளையார் திருவாக்குகளானே பெறப்படும். அவை, "கோழைமிட றாககவி கோளுமில வாகவிசை கூடும் வகையால்—ஏழையடி யார்களவர் யாவைசொன சொன்மகிழுமீசன்" எனவும், "இசைகூர வந்தவணமேத்துமவர்" எ-ம், "சம்பந்தன் கருதுபாடல்—கோழையா

வழைப்பினுங் கூடுவார் நீடுவா னுலகி னூடே" எனவும் வருதல் காண்க.

தேவாரம் முதலாகப் பெரியபுராண மிறுதியாக வோதப்பட்ட பின்னரன்றி நிறுத்தலும், பிறவிடயங்களைச் செய்தலும், சபையை விட்டுப் போதலுங் கூடாவாம்.

பன்னிருதிருமுறை நித்தியநைமித்திகங்கள்.

பன்னிரு திருமுறைகளும் பதிநால்களென்று சொல்லப்படும்; சிவபெருமான் மற்றவைகளினிடத்தே பாலினெய்போல விளங்காது நிற்பினும், இத்திருமுறைகளினிடத்தே தயிரினெய்போல விளங்கிநின்றருள் செய்வர் என்பது முன்னரே நன்குவிளக்கப்பட்டது. சிவபெருமான் ஆன்மாக்கட்கு அருள்செய்யுந் தாபரசங்கமப் பொருள்களில் தாபரப்பொருள்களாகிய இலிங்கங்கள், கோபுரங்கள், சிலாமூர்த்தங்கள், உலோகமூர்த்தங்கள், சங்கமப்பொருள்களாய சிவனடியார் திருவேடங்கள் என்று மிவைகள் விசேடித்தன. இவற்றினும் விசேடமுள்ளன பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்களேயாம். இவை தாபரசங்கமப்பொருள்களையும், அவற்றிலிருந்து அருள்புரியும் பரசிவனையும் அடக்கிநிற்கும். தொண்டர்கள் யாவரினும் பெரியவர், எல்லாவற்றையுந் தம்முளடக்கி நிற்குஞ் சிவபெருமானையுந் தம்மகத்தடக்கி நின்றாராகலின். அது, சட்புத்தருவிற் கந்தமகவு பெரியதுயாதென வினவியதற்கு,

> பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
> பெரிது பெரிது புவனம் பெரிது

புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனி கையிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ இறைவர்பா கத்தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இதனை விடையாகத் தெய்வப் புலமை ஔவையார் தெரிவித்ததனை யறிக. இதனாலே எல்லாரினுந் தொண்டர்கள் பெரியவர் என்பது முடிந்தது. யாம் அப்பெரிய தொண்டர்களைப் பார்க்கிலும் பெரியன பன்னிரு திருமுறைகளென்கின்றோம். என்னை? எல்லாவற்றையுமடக்கி நிற்குஞ் சிவனையுந் தம்முள் அடக்கி நின்ற திருத்தொண்டர்களையுந் தம்மகத்தடக்கி நிற்றலானென்க. ஆதலாற் திருமுறைகளே யுலகத்து விழுமிய பொருள்களினும் மேலாம் விழுமியபொருள். அவற்றிற்கு ஒப்பானவும் உயர்ந்தனவுமான பொருள்கள் உலகத்து வேறில்லை. இது சத்தியம் சத்தியம் முக்காலுஞ் சத்தியம். இவ்வுண்மை, மதிமுடிதரித்த வடிவுடை யடிகளை யுள்கி யருள் பெற்ற பொதியமலை மாதவன் சிவாலயமுனிவர்க்குத் தேவாரமுழுவதையும் உபதேசித்து அதினின்று இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டிக்கொடுத்துப்

பாராயணஞ் செய்வித்த மகிமையாலும்விளங்கக்கிடக்கு மாயின் றிருமுறைப்பெருமைக்கெல்லையின்றெனக.

பன்னிருதிருமுறைகள் சிவபெருமான், திருக்குமாரர்களாகிய விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், மகேசமூர்த்தங்கள், சத்தியாகிய உமையம்மையார், சமயபராமாசாரியசுவாமிகள், சண்டேசுரர் முதலாய நாயன்மார்கள் இவர்களையெல்லாம் அடக்கி நிற்றலானும், சொல்லும் பொருளும் சிவமுஞ் சத்தியுமாம் என்று தமிழ்மறைகள் கூறுவதனானும், இவற்றை யொருகணமும் நீங்காது பரமனார்வீற்றிருக் கின்றார் என்பது திருமுறைகளையருளியார் இட்ட ஏவல்களையெல்லாங் கேட்டுச் செய்தருளிய செய்கையாற் காணப்படுதலானும், இத்திருமுறைகளைப் பூசித்தவர் சிவபெருமானைப் பூசித்தவராவார். உமாபிராட்டியாரை யர்ச்சித்தவராவார். சிவகுமாரர்களையும் பரமாசாரியசுவாமிகளையும், சண்டேசுரநாயனார் முதலாயினோரையும் பூசித்தவராவார். இவர்கள் யாவர்க்குந் தனித்தனி அபிடேக அலங்கார உபசாஅர்ச்சனாதிகளைச் செய்ய இயலாதவர் பன்னிருதிருமுறைகட்கும் நித்தியமாகிய பூசையையும் நைமித்திகமாகிய மகோற்சவத்தையுஞ் செய்விக்கக்கடவர். அது அவர்களைப் பூசித்ததாயும் அவர்களுக்கு மகோற்சவஞ் செய்ததாயும் முடிதலேயன்றிக் கோடிசிவலிங்கப்பிரதிட்டை செய்ததாயும் முடிந்து அப்பன்னிருதிருமுறைகளில் எத்துணை யெழுத்துக்களுளவோ அவ்வளவு கற்பகோடிகாலம் போகங்களை யநுபவிக்கச்செய்து

மீளாமுத்தியாகிய சிவசாயுச்சியத்தையும் அவர்கட்குக் கொடுக்கும்.

நித்திய நைமித்திகங்களுக்கு எழுத்துப்பிழைகள் சொற்பிழைகள், முதலாய குற்றங்களில்லாமலிருக்கும் ஏட்டுப்பிரதிகளையே கொள்க. ஏட்டுப்பிரதிகள் அக்குற்றங்களை யுடையனவாயின் அவற்றை யொரீஇச் சுத்தமாகப் பதிப்பிக்கப்பட்ட கடிதப்புத்தகங்களை வாங்கிப் பட்டுக்கட்டடஞ் செய்துகொள்க. பொன்கில்ட்டு வைத்த புத்தகங்கள் ஆகா. என்னை? அக்கில்ட்டு இழிந்த பதார்த்தத்தின் சாரமின்றேற் பிடியாதாகலின். இங்ஙனம் பன்னிரு திருமுறைகளையும் சம்பாதித்தவர், சிவபெருமானையும், சிவஞானத்தையும், சமயாசாரியர்களையும், மற்றைய திருமுறை நாயன்மார்களையும், தன் ஆசிரியரையும் பணிந்து, அதன்பின்னர் எட்டுமுழ நீளமும் நான்குமுழ அகலமுங் கொண்ட மண்டபமொன்று செய்து, நான்கு மூலைகளினும் நான்கு வைரத்தூண்கள் நாட்டி, பட்டுவஸ்திரத்தால் வேய்ந்து, அலகிட்டுமெழுக்குமிட்டு மண்டபநடுவண் தாமரை மலர் ஒன்று நீற்றினாற் செய்து, இரத்தினங்கள், புட்பங்கள், கண்ணாடி, பழம், சாமரம் முதலிய கட்டித் தூங்கவிட்டு, வாழை, கமுகு, கரும்பு, தோரணமிவை நாட்டி, மேலிடத்தில் வெண்பட்டுக் கட்டி, நான்குதிசைகளினும் கும்பம் வைத்து, தாமரைமலர்களை யவற்றின் வாயினிறையப் பெய்து, முளையிட்டு, இரத்தினங்களழுத்திச்செய்த பீடமாவது, சுத்தபீடமாவது நடுவிலிட்டு, அப்பீடத்தினடுவே பன்னிருதிருமுறைகளையும் தாபித்து, கோரோசனை பச்சைக்கர்ப்பூரம் முதலாய பரிமளகந்தங்களை

பாபி, இரத்தினமாலை, பொன்மாலை, பட்டுவத்திரம் முதலியன அவற்றிற்குச் சாத்தி, தொங்கன் முதலாய விசித்திரங்களுமிட்டு, அருச்சனை செய்து, நைவேத்தியம் புரிந்து, கர்ப்பூரம், சந்தனம், அகில், குந்திருக்கம், குக்குலு முதலியபஞ்ச தூபங்கள் இட்டு, கபிலைப் பசுவின் நெய்யினாலே தீபங்கள் இட்டு, சிரம், முழந்தாள், இரு கன்னம், முகம், வாய், புயங்கள் என்னும் எட்டு அங்கங்களும் நிலத்திற்றோய வணங்கி, பஞ்சாங்கமாகவும் பணிந்து எழுந்து தோத்திரம்புரிந்து, அதற்குப் பக்கத்தே கோயிலொன்று செய்து, ஆசான் கொடுக்கத் திருமுறைகளை பெற்று அக்கோயிலிற் பிரதிட்டித்துப் பூசைசெய்க. இது சிவபூசைக்கும், சிவனடியார்பூசைக்கும் மேலாயதென்க.

அவ்வத் திருமுறை நாயன்மார்கள் திருநட்சத்திரம் வருஉங்காலத்து அபிடேகாதிகள் செய்வித்து, தன் ஆன்மார்த்தமாகவுள்ள கோயிலின் இடத்தாவது, அந்நாயன்மார்கள் இருக்கும் ஆலயங்களிலாவது அவ்வந் நாயன்மார்களையும் திருமுறைகளையும் அலங்காரமுதலிய செய்து சர்வோபசாரங்களோடும் யானைமீது ஆரோகணிப்பித்துத் திருவிழாக்கொண்டாடுக. யானைமீதுவைக்கும் வழக்க முந்தைநாளுண்டென்பது சேக்கிழார்பெருமானையும் திருமுறையையும் விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாகிய சிதம்பரக்ஷேத்திரத்திலே யானைமீது எழுந்தருளப் பண்ணுவித்து, அநபாயசோழமகாராசா அவர்கள் தாமே சாமரையிரட்டித் திருமுறைப்பவனி வருவித்தார் என்று, சந்தானாசாரியசுவாமிகளாகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் தாம் அருளிச்செய்த சேக்கிழார்புராணத்திலே திருவாய்மலர்ந்தருளியதனாலேயறிக.

யானைகிடையாவிடத்து இரதத்தின்மீதேற்றி, அறமனைதோறும் நிறுத்தி, அவரவர் சிறப்புக்கொண்டு, அரசனுமதற்கியைவானாயிற் சிறைவிடுவித்து, அவனுமுடன்வர, வாத்தியங்கள் இயம்ப, நகர்வலம்வந்து சிவாலயத்தையடைந்து, ஆங்கு எழுந்தருளப்பண்ணுவித்துப் பூசைசெய்து, வேந்தனையுள்ளிட்டவர்க்குச் சில பாசுரங்களையெடுத்துக்கூறி, ஆசாரியற்குப் பொன்னீந்து, தமிழ்மறையோதுவார்களுக்குத் தானம்புரிந்து முன்னிருந்தாங்குக் கொடுசென்றுவைக்க. இங்ஙனம் முதன் முதற் பூசைசெய்வோர் ஆடிப்பூரணை, வைகாசிப் பௌர்ணிமை என்பவற்றிற் றொடங்கனன்று.

இங்ஙனம் திருமுறைகளுக்கு நித்திய நைமித்திகங்களாகிய பூசைமகோற்சவங்களைச் செய்வாராயின் உலகங்களிற்றுன்பமில்லையாகும். கன்னம், களவு, நோய் முதலிய பயங்க ணீங்கும். நன்மையெல்லாம் விளையும். திங்கள்மும்மாரி பெய்யும். செய்தோர் செய்வித்தோர் இவர்கள் எழுத்தொவ்வொன்றற்கு ஓராயிரங் கற்பமாக சிவலோகத்தில் இனிதிருந்து வாழ்வர் என்று அகத்தியமுனிவர்க்குக் கந்தக்கடவுள் உபதேசித்தருளினார். இதனைச் சர்வோத்தராகமத்தின் உபாகமம் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரத்தும், பிரணவார்த்த நகரமான்மியத்துங் காண்க.

உபதேசகாண்டம்.

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினோ டாங்கதற் கருச்சனை செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலம்.

அரியணை மீது வெண்புத் தகத்தினை யமைத்து மேலால்
வரியிவர் புத்த கத்தை வைத்துரோ சனைகப் பூரம்
பரிமளக் கலவை கொட்டிப் பன்மணித் தொடலை தூசு
விரிமணத் தொங்க லாதி விசித்திரம் பிறங்கச் சாத்தி.

முடிவுநாள் பசித்து முக்கண் மூர்த்தியைப் புத்த கத்தைப், படியிலாக் குரவன் றன்னைப் பூசனை பயிற்றி யெல்லிக், கடிகொண்மங் கலத்தால் வேத வொலியினூற் றுயிலைக் காதி, விடிவுகண் டருச்ச ஞதி விளைத்திர தத்தி னேற்றி.

அறமனை தோறு மாக்கி யவரவ ருடங்கு நண்ண
மறலினர் நிகளஞ் சீத்து வண்பலி பலவு மோக்கித்
திறன்மிகு மிறையும் போதச் செறிந்தியம் பலவு நல்க
நிறைவளர் நகர்சூழ் போந்து நின்மலன் கோயி லுய்த்து.

மீட்டுநற் பூசை யாற்றி வேந்தனை யுள்ளிட் டோர்க்குத், தீட்டுபுத் தகத்திற் சில்ல வாக்கியந் தெரித்துச் செம்பொன், கோட்டமில் குரவற் கீத்துக் கொழும்பொனுந் தூசு மற்றும், வாட்டமின் மறையோ ராதி வௌவுற வழங்கல் வேண்டும்.

இன்னணம் பூசை யாற்றி னிடரெலா முலகிற் றேறம்பு, மன்னுறு நன்மை யெல்லா மதிகண்மும் மாரி நல்குஞ், சொன்னவா றீந்து ளாருந் தொகுமெழுத் தொரோவொன் றற்கங், குன்னருஞ் சிவலோ கத்து ளோராயிரங் கற்பம் வாழ்வார்.

ஆடிவை காசித் திங்க ளடுத்தபூ ரணையிற் பூசை, நாடினர் தாமு முன்னை நற்பயன் பற்று வார்க, ளேடெ

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


ழு தூசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர், பீடுறப் பயில்வோர் சொல்வோர் பெரிதரும் பயன்க ளாய்வோர்.

### பாராயண ஆனந்தக் கூத்து.

இன்பமே உருவாக விளங்கி எல்லா ஆன்மாக்கட்குந் தமதிணையில்பேரின்பத்தைத் தந்தருளு மிறைவன் றனக்கென வொன்றையும் வேண்டுதலும் வெறுத்தலும் இல்லானென்று வேதாகமங்களும் ஆன்றோரும் மிகுத்துக்கூறுவர். அதனை, மற்றைய விடயங்களைநோக்குங்கால் ஆமென்பேம். திருமுறைகளை நோக்குங்கால் தனக்கென வொன்றை விழைதலும் வெறுத்தலுமுடையானெனச் சொல்வேமன்றே. எதனை விழைதல் எதனை வெறுத்தல் எனில், தேவார திருவாசகங்களாதிய திருமுறைகளை விழைதலும், அவைபோல்வனவல்லாதவற்றை வெறுத்தலுமுடையானென்றுணர்க. இங்ஙனமாயதத்துவங்கடந்த தனிப்பரம்பொருளும் தமிழினயங்களையெல்லாம் பேசிப்பேசிக் கூத்தாடுவாரென்றாற் சிற்றறிவும் சிறுதொழிலுந் துக்கவுருவுமுடையமானுடர் முதலாய உயிர்களிங்ஙனஞ் செய்தல் வேண்டுமென்பது கூறவும் வேண்டுமோ? தமிழி னயம்பேசியாடுகின்றா னிறைவனென்பது,

திருக்கானூர். (௧ - திருமுறை.)

தமிழி னீர்மை பேசித் தாளம்வீ ணைபண் ணிநல்ல
முழவ மொந்தை மல்கு பாடல் செய்கையி டமோவார்
குமிழின் மேனி தந்து கோலநீர் மையது கொண்டார்
கமழுஞ் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே.

என்னுந் திருப்பாசுர முழங்குமாற்றா னறிகின்றாம். இங்ஙனம் இறைவனே ஆனந்தக் கூத்தாடுமானால், புழுத்த நாயினுங் கடையேன் தேவாரமுதலிய திருமுறைப் பாசுரங்களைக் கேட்டுப் பரவசப்படுதலால், ஆனந்தவிளையாட்டாட லுமோர் வியப்பன்றாம். ஆகவே பாட்டினருமை தெரிந்தார், பொருள்கண்டார் பத்திமேலிட்டாரெவர். அவர்க்கு வெட்கமுதலியன போய்விடும். அங்ஙனமாடுதல் பத்தர்க்கிலக்கணமென்பது "தலையாகக் கும்பிட்டுக் கூத்தாடி" என வாக்கிறைவரும் "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலை யென்புருகிப்-பாடுகின்றிலை" என மணிவாசகப்பிரானும் "கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" என அருணகிரிவாசாரியரும் ஓதியருளியவாற்றானுணர்க.

தேவாரத் திருவருட்பாக்கள் நாடகத் தமிழுஞ் சேர்ந்திருத்தல் பற்றியன்றோ ஆளுடையபிள்ளையார்க்கு முத்தமிழ் விரக னென்னுந் திருப்பெயர் போந்தது. அன்னவருந் தமது தேவாரத் திருப்பதிகங்களை "நடங்கொடமிழ்" என்று கூறியருளினார். அதற்கேற்பப் பாராயணம் பண்ணி ஆனந்தக் கூத்தாடுவோரும், கேட்டு ஆனந்தக் கூத்தாடுவோரும் முத்தியடைவார் என்பது திண்ணம்.

## தேவாரமென்பதல் பொருள்.

௧. தே+வாரம் = தேவினிடத்து வாரத்தை விளைவிப்பது. அஃதாவது சிவபிரானிடத்து (அதனை ஓதுவோர்க்குங் கேட்போர்க்கும்) அன்பை யுண்டுபண்ணுவது என்பதாம்.

பேரழகு பேராண்மை பெருங்கல்வி பேரறம் முதலியவற்றையுடைய ஆண்மகனது இலக்கண முதலியவற்றை ஓதல் கேட்டல்களைச்செய்த துணையானே மகளிர்க்கு அவன்மாட்டுக் கழிபெருங்காம மீதூர்தல் போல, சிவபிரானது இலக்கணங்களும் அருட்குணங்களும் பிறவும் திராவிடவேதத்தின்கட் கூறப்பட்டிருத்தலான், அவற்றை ஓதல் கேட்டல்களைச்செய்ததுணையானே மக்கட்குக் கழிபெருங்காதன் மீதூருமென்றுணர்க.

திராவிட வேதத்தை ஓதல்கேட்டல்களைச்செய்த மாத்திரையானே நம்மனோர்க்குச் சிவபிரான் மாட்டுக் கழிபெருங் காதல் மீதூர்தல் ஒருதலையே யென்பது அநுபவப்பிரமாண மாகலான் இதற்குச் சுருதிப்பிரமாணம் வேண்டுவதன்று; வேண்டுமாயின், "வெள்ளை றுடையான் றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த" எனவும், "விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்—காரண னுரையெனு மாரண மொழியோ—வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்—மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ—யாதோ சிறந்த தென்குவீ ராயின்—வேத மோதின் விழிநீர் பெருக்கி—நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்—திருவா சகமிங் கொருகா லோதிற்—கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க—டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய—மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி—யன்ப ராகுந ரன்றி—மன்பதை யுலகின் மற்றைய ரிலரே." எனவும் வருவனவற்றான் உணர்க.

அன்புசெய் தாண்டகம் என்புழிக் "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்." எனவும், "மெய்ஞ்ஞானந் தானே விளையும்." எனவும், "அரச னெடுத்த வாலயம்." எனவும் வரும் வாக்கியங் களிற் போல விவ்விகுதிதொக்குநின்றது; எனவே, ஓதல் கே ட்டல்களைச் செய்ததுணையானே சிவபிரான்மாட் டன்பைச் செய்விக்குந் திருத்தாண்டகம் என்பது பொருள்.

உ. தே+வாரம். சிவபிரானுக்குத் (தன்னிடத்தும் தன்னை யோதுவோரிடத்தும்) இன்பை விளைவிப்பது. அதனிடத்தும் அதனையோதும் பத்தர்களிடத்தும் சிவபிரான் வாரமுடையரா வர் என்பது கருத்து.

அதனை, "பாட்டிற் கின்புறு குருபரன்" எ — ம், "ஒழித்தி டும்பவப் பகைவிரைந்துள்ளமே யோதுமூ துணர்வோர்முற்— பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்கிளம் பாவையருரைபோ லுங்—கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ கட்டுரை யெனக் கொள்வாய்—விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப் பினர் விருப்பீதே" எ-ம், "கூட வேடத்தராகிக் குழுமிலென்— வாடி யூனை வருத்தித் திரிகிலென்—ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்—பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே." எ — ம், "படியிலா நின்பாட்டி லாரூர நனிவிருப்பன் பரம னென்ப— தடியனே னறிந்தனன்வான் றொழுமீச னிவனைத்தடுத்தாட்கொ ண்டு மன்றித்—தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்கா கத் தூது சென்று—மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன் றமையால் விளங்கு மாறே." எ—ம், "தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற—வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்—பண்மலர் சாத்திப் பணி கொண்ட வாபச்சை மால்சிவந்த—கண்மலர் சாத்தியுங் காண்பரி

தான கழன்மலரே." எ - ம், "ஓது நாவினுங் கேட்டவர் செவிப்புலத் துள்ளு—* * * * மாது பாகனுற் றுறைகுவன்." எ - ம். வருவனவற்றான் உணர்க.

மேலும், "பாடுவார் பசிதீர்ப்பாய்." எனவும், "அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே" எனவும் வரும் தமிழ் மறைகளானும் உணர்க.

ங. தே + ஆரம். சிவபிரானுக்கு ஆரம்போல அலங்கரிப்பது.

அதனை, "பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு—முழுது மாகிய வடத்தினான் முறைதொடுத் தலங்கல்—அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந்தையர்."என்பதனான் உணர்க.

ச. தே + ஆரம். தெய்வத்தன்மைபொருந்திய பாமாலை. அது, "பன்மாலைத் திரளிருக்கப் பாமாலைக் கேநீதான் பட்சமென்று—நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்" என்பதனான் உணர்க. இப்பொருட்குத் தேவ + ஆரம் எனப்பிரிப்பினும மையும்.

ரு. தே + வாரம். சிவபெருமானுக்கே உரிமையுடையது; வாரம்-உரிமை. வேதம்போலாது சிவபெருமான் ஒருவரையே பதியெனக்கொண்டு போற்றலின் சிவபிரானுக்கே உரியதென் னும் பொருளுஞ் சிறந்தமை காண்க.

சா. தே + வாரம்.தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்பாருமுளர்.

தெய்வத் தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்றதனை விளக்குவாம். வாரம்என்பது:—இசையினியக்க நான்கினு ளொன்று, உரு, தெய்வப்பாடல், பற்று எனப்பொருள்படும். அது "வார நிலத்தைக் கேடின்று பார்த் தாங்கு" எனவும், "வாங்

கிய வாரத்து" எனவும், "வாரம் பாடுந் தோரிய மடந்தையும்" எனவும் வரூஉஞ் செய்யுட்களாற் பெற்றும். முதனடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்பட்ட இசையியக்கம் நான்கனுள், முதற்கணுள்ளது மிகவுந் தாழ்ந்த செலவினை யுடைத்தாகலானும், இறுதிக்கணுள்ள திரள் என்பது மிகவும் முடுகிய நடையினை யுடைத்தாகலானும், இடைப்பட்ட இரண்டனுள், வாரப்பாடலே சொல்லொழுக்கானும் இசையொழுக்கானும் சிறந்ததாகலின், அதுவே இசைத்தமிழ்ப் பாடற்குரிய சிறப்பியக்கமென்க. அத்துணைவிசேடவியக்க முடைமையோடு தெய்வத் தன்மையு மமைதலிற் றேவாரம் என்பது மொன்று.

உரு ஆவது:—கந்த முதலாகப் பிரபந்த வுரு வீறாகவுள்ள அகநாடகங்களுக்குரியன இருபத்தெட்டும், தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளீறாகவுள்ள புறநாடகங்களுக்கு உரியனவெல்லாமுமாகிய மங்கலப் பண்ணுற் பாடப்படும் பாட்டுக்களாம். இவை நாடகவியற் குரியன வென்க. மூவர்முதலிக டிருவாய் மலர்ந்தருளிய தமிழ்வேதப் பதிகங்களும், மங்கலப் பண்களாணியற்றப்பட்டு, மங்கலச்சொற்களை யுடையனவாய், உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை யென்னும் நாலுறுப்புக்களுங் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் தேவர்ப்பராவுந் தேவபாணியாகக் கொட்டுங் கூத்தும் நிகழ்த்தித் தெய்வத்திருவருள்வழி அருளப்பட்டனவாகலின் தேவாரமென்னும் பெயர்த்தென்க.

தெய்வப்பாடலென்பது:—நாடகத்தில் அவதாளம் நீங்கவும், தாளம் பொலிவுறவும், நன்மை உண்டாகவும், தீமை நீங்கவும், முதலிலும் இறுதியிலும் பாடப் படுவதாம். அங்ஙனே தமிழ் வேதமும், சிவபெருமான் திருமுன்னிலையிலே நின்று தற்

போதங் கெடவும், சிவசரணம் பொலிவுறவும், உலகர்க்கு நன்மை விளைவிக்கவும், மூவகைத் துன்பமிரிவிக்கவும் ஓதியருளப்பட்டமையானும், நாடகம் போன்ற பிரவஞ்ச வியாபாரங்களில் முதலினும் இறுதியினும் ஓதப்படற்குரிமையானும் தேவாரம் என்னும் பெயரையுடைத்து என்க.

பற்றுவது:—விதிப்படி கொண்ட அரங்கத்திலே தலைக்கோற் பட்ட முற்ற அரிவையென்பாள் அகக்கூத்துப் புறக்கூத்திற்குரிய வரி,பாணி, தூக்கு, குயிலுவக்கருவி என்னு நான்கு முணர்ந்து, நால்வகை அவிநய நிலத்து நின்று கூத்தாடி முடிந்த பின்பு,அவள்காலுக்கு ஒத்தறுத்து இடத்தூணிற்சேர்ந்து நின்று தோரிய மடந்தை, தலைப்பாட்டுக் கூத்தி, இடைப்பாட்டுக் கூத்தி யென்னும் பாடன் மகளிர் மூவரானும் பாடப்படும் ஓரொற்றுவாரம், ஈரொற்றுவாரம் என்னுந் தேவ கானமாம். இத்தமிழ் வேதமும் பற்றென்னும் பாடல் போன்றதாகலின் வாரம் எனப்பட்டது. எங்ஙனமெனில், பெருமைவாய்ந்த திருச்சபைகளிலேறி யாவர்க்கும் எவற்றிற்கும் தலைமையாக விளங்கும் சபாநாதனாகிய நடராசப் பெருமான், ஆன்மாக்களின் இருவினைகட்கு மேற்ற தனு கரண புவன போகம் என்னு நான்கையு முணர்ந்து, பஞ்சகிருத்திய தாண்டவ நிகழ்த்துழி, அவன் திருவடிக்கு ஒத்தறுத்து அவனருள்வழி நின்று, நால்வேத வாய்மை வைத்து, மூவர் மகளிர் போலும் மூவர் முதலிகளாற் பாடப்பட்ட வாரம் ஆகலிற் றேவாரம் ஆயிற்றென்க.

திருமுறைப்பெருமை முற்றிற்று.

---

* மூவகைத்துன்பமாவன:—தன்னைப்பற்றிவருவன பிறவுயிரைப்பற்றிவருவன தெய்வத்தான்வருவன என இவை.

உ

## திருச்சிற்றம்பலம்.

# சென்னைச்சிவனடியார் திருக்கூட்டம்.

இச்சபை கலி ஐயாயிரத்தில் விளம்பி௵ மார்கழி௴ ௧௨௳ (௧௮௯௮௵ டிசம்பர்௴ ௨௫௳) ஆதிவாரம் திருவொற்றியூர் ஸ்ரீதியாகராஜப்பெருமானார் சந்நிதியில் தாபிக்கப்பட்டுச் சென்னையில் நடைபெற்று வருகின்றது. இச்சபை அரசாங்கத்தாரால் ௧௮௯0 ஆவது வருடத்து ௨௧ ஆவது சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருக்கிறது. இச்சபையார் தங்களிருப்பிடமாக ந௫00 ரூபா மதிப்புள்ள சபாமண்டபங்கட்டி வைத்திருக்கிறார்கள். இச்சபையின் இருப்பிடம் "சென்னைச்சிவனடியார்திருக்கூட்டச்சபாமண்டபம்." எனப் பெயர்பெறும். *

இச்சபையார் அநாதிமலமுத்தராகிய சிவபெருமானே முழுமுதற்கடவுளெனவும், வேதசிவாகமங்களே அவரருளிச்செய்த முதனூல்களெனவும், அவற்றுள் வேதம் பொதுநூல் சிவாகமம் சிறப்புநூலெனவும், தேவாரத்திருமுறைகளே அவற்றின்சாரமாகிய தமிழ்வேதத் திருவருட்பாக்களெனவும், விபூதி உருத்திராக்கங்களே பசுபோதங்களைய வல்ல சிவ சின்னங்களெனவும், ஸ்ரீ பஞ்சாக்கரமே வீடுபேறருளும் சிவமூலமந்திரமெனவும், குரு லிங்க சங்கம வழிபாடே சிவபெருமானார்க்குச் செய்யப்படும் உத்தமோத்தமமாகிய வழிபாடெனவும், மதித்தொழுகுங் கொள்கையையுடையவர்கள்.

இவர்கள் பெருங்கூட்டமாகக்கூடிச் சிவக்ஷேத்திரங்களையடைந்து விதிப்படி பெருமானார்க்குத் திருமஞ்சனமாதியுபசாரங்களைச் செய்வித்துச் சிவாலயவழிபாடு செய்தும், உழவாரத் திருப்பணிசெய்தும், புண்ணியதீர்த்தங்களில் மூழ்கியும், கிரிவலம் வந்தும், பெரியோர்களைத்தரிசித்தும், ஆங்காங்குக் கூடியிருக்கும் சிவனடியார் திருக்கூட்டங்களுடன் அளவளாவியும்,

---

* இதுவேவிலாசமும்.

சைவ சபைகளில்லா விடங்களிற் சபைகளைச் சேர்ப்பித்தும், மனங்கசிந்துருகுமாறு தமிழ்வேத பாராயணம் பண்ணியும், சைவப்பிரசங்கஞ்செய்தும், வித்தியாசாலை வைத்துச் சிறுவர்களுக்குச் சைவசமயநூற்பயிற்சி செய்வித்தும், யாவரும் சொற்பவிலைக்குவாங்கி வாசித்து உய்யும்வண்ணம் சமயநூல்களை யச்சிட்டும், பலரும் இலவசமாக வாசிக்குமாறு சிவஞானமுனிவர்பேரால் புத்தகசாலைவைத்தும், சைவசமயாபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

இச்சபையார் ஒவ்வொருயாத்திரையிலும் ஐம்பதுமுதல் நூறுபேரளவில் கூடிப்புறப்பட்டு வீண்காலம் போக்காமலும், நடை, நித்திரையின்மை, அகாலபோஜன முதலியவற்றால் நேரிடுஞ் சரீரப்பிரயாசையைச் சற்றுங்கவனியாமலும்,பொருட்செலவைப் பொருட்படுத்தாமலும், அன்புமேலீட்டினால் செய்துவரும் சிவாலயவழிபாடாதிகளைக்காணும் பிராமணர் முதலிய எல்லாவருணத்தினரும் சந்நியாசிகள் முதலிய எல்லா ஆச்சிரமத்தினருமாகிய சிவநேயச்செல்வர்கள் பலரும் பத்திரிகை வெளியிட்டும் பறையறைவித்தும் இச்சபையார் வருகையைப் பேருவகையுடன் பலருமறிய விளம்பரப்படுத்தி வீதிமுதலியன வலங்கரித்துச் சர்வோபசாரத்துடன் எதிர்கொண்டு வரவேற்றும்,ஆலயவழிபாட்டிற்கு வேண்டிய பல உதவிகளைச்செய்தும், மாகேசுரபூசை செய்வித்துங் கொண்டாடி, இதுபோன்ற சபைகளை யேற்படுத்திச் சிவாலய வழிபாடாதிகள்செய்து வருகிறார்கள்.

இச்சபையார் இதுவரையில் கசூ0 தலங்களுக்கு யாத்திரை செய்தார்கள். தாங்கள் வைத்திருக்கும் பாடசாலையில் ஆங்கிலமுந்தமிழுஞ் சைவநூல்களும் சிவாலயவழிபாடுங் கற்பிக்கிறார்கள். முதல் முதலாகப் பன்னிரண்டு தேவாரத்திருமுறைகளைத் திரட்டியச்சிட்டுச் சொற்பவிலைக்குக் கொடுத்தும், தேவாரத் திருமுறைகளுக்குத் திருவீதி மகோற்சவங்கள் செய்வித்துஞ் சென்னை முதலான பலவிடங்களையுந் தமிழ்வேத பாராயண

பயமாகச் செய்துவைத்திருக்கிறார்கள். இச்சபையின் வரவு செலவுக்கணக்குகள் ஆரம்பமுதல் இதுவரையில் மிகவும் ஒழுங்காக வைக்கப்படுவது மன்றி வருடாந்தரச்சபாக்கிரந்தங்களோடு விவரமாக அச்சிட்டும் வெளியிடப்படுகின்றன. இச்சபையில் இப்போது சற்றேறக்குறைய ௩௨0 சமாசியர்களிருக்கிறார்கள். இச்சபைக்குப்போதுமான வருமானமின்மையால் இச்சபையார் தாங்கள் மேற்கொண்ட காரியங்களைக் கடன்வாங்கியுஞ் செய்கிறார்கள். (இவ்விதமான சபை கிறிஸ்தவர்களிடமிருந்தால் அதற்கு இதுவரையில் எவ்வளவோ மூலதனங் குவிந்துவிடும்.) ஸ்ரீமான் ஜெ - யெம் - நல்லசாமிப்பிள்ளை பி. எ.–பி. எல். அவர்களும், ராவ்பஹதூர் ஆறுகாடு மெய்கண்டதேவ முதலியாரவர்களும், ராஜா ஸர். சவலை இராமசாமிமுதலியாரவர்களும், அணைக்கட்டு சொக்கலிங்கநாயகரவர்கள் முதலிய சிற்சில ஸ்ரீமான்களும், இச்சபைக்குப்பலமுறையும் பலவுதவிகள்செய்தார்கள். யாழ்ப்பாணத்துவண்ணைநகர் **ஸ்ரீலஸ்ரீ, சுவாமிநாதபண்டிதரவர்கள்** இச்சபைக்குக் கௌரவசைவப்பிரசாரகராயிருப்பதுமன்றி இச்சபையை முன்னுக்குக் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளுஞ் செய்கின்றார்கள். இனி இச்சபையார் மேற்கொண்ட பெருங்காரியங்கள் வெகுலேசில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இச்சபையின் சமாசியர்களும் அபிமானிகளும் பண்டிதரவர்களும் சிவபெருமான் திருவருளால் அரோகதிடகாத்திரராய் வாழ்ந்து இன்னும் பொதுநன்மைசெய்வார்களாக. சுபம்.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

**பூவை - கலியாணசுந்தரமுதலியார்**

காரியநிர்வாகசபைத்தலைவர்.

சென்னை. 20 - 4 - 11. } **இ. ஆதிமூலமுதலியார்**

காரியதரிசி.